பக்கங்கள்: 12

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஐப்பசி 02 | வெள்ளிக்கிழமை 19.10.2018 | கதிர் 347

இனி இது ரகசியம் அல்ல!

*'என்ன இது சின்னப்பிள்ளைத்தனமாக இருக்கிறது?'*- இது ஒரு படத்தில் நகைச்சுவை நடிகர் வடிவேல் கேட்கும் கேள்வி.

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கொல்வதற்கு 'றோ' சதி செய்தது என்ற சாரப்பட வெளியான குற்றச்சாட்டு விடயத்தில் பக்கம் 02 >>>

# மைத்திரியை இந்தியாவுடன் மோத வைக்கச் சிலர் திட்டம்



## எஸ்.பி. திஸாநாயக்க பகீர் தகவல்

கொழும்பு, ஒக்ரோபர் 19

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அரசியல் ரீதியிலும் படுகொலை செய்வதற்கு முயற்சிக்கப்படுவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 15 பேர் கொண்ட அணி தெரிவித்துள்ளது.

இதற்காக இந்தியாவுடன் மைத்திரிபாலவை மோத வைப்பதற்குச் சிலர் திட்டமிடுகின்றனர் என்றும் அந்த அணி குற்றம்சாட்டியுள்ளது. பக்கம் 11 >>>

## இந்தியா பறந்தார் ரணில்!



கொழும்பு, ஒக். 19

மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுப் புதுடில்லி நோக்கிப் பயணமானார். பக்கம் 11 >>>

## தங்கத்தின் விலை கிடுகிடு உயர்வு

கொழும்பு, ஒக். 19

இலங்கையில் தங்கத்தின் விலை மீளவும் அதிகரிக்க ஆரம்பித்துள்ளது.

கடந்த வாரம் 24 கரட் தங்கத்தின் விலை 56 ஆயிரத்து 800 ரூபாவாக் காணப்பட்டது. எனினும் அதன் விலை கடந்த திங்கட்கிழமை பக்கம் 11 >>>

## விமான ஓடுபாதை அருகே வெடிபொருள்கள் சிக்கின!

### தள்ளாடி படைமுகாம் பகுதியில்



மன்னார், ஒக். 19

மன்னார், தள்ளாடி விமான ஓடுபாதை அமைந்துள்ள பகுதியிலுள்ள பற்றைக்குள் இருந்து ஒரு தொகுதி வெடி பொருள்கள் நேற்று கண்டு பக்கம் 11 >>>

## ரி 56 துப்பாக்கி ரவையுடன் வவுனியாவில் ஒருவர் கைது

வவுனியா, ஒக். 19

வவுனியாவில் ரி-56 ரகத் துப்பாக்கி ரவையுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் இரவு 10 மணியளவில் வவுனியா, பக்கம் 11 >>>

## புளியங்குளம் விபத்தில் யாழ். இளைஞன் சாவு!



வவுனியா, ஒக். 19

வவுனியா - புளியங்குளம் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் உயிரிழந் பக்கம் 11 >>>

## கேள்விக்கணைகளால் மஹிந்த கடும் சீற்றம்!

### ஊடகவியலாளர் சந்திப்பிலிருந்து வெளியேறினார்



கொழும்பு, ஒக். 19

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் பக்கம் 11 >>>

## மோடியிடம் மைத்திரி என்னதான் சொன்னார்?

கொழும்பு, ஒக். 19

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன'றோ'குறித்துத்தான் தெரிவித்தார் என வெளியாகும் தகவல்களை மறுத்துள்ளார் என்று பக்கம் 11 >>>

## எரிபொருள் விலைச் சூத்திரம் வெளியிட்டார் நிதி அமைச்சர்




கொழும்பு, ஒக். 19

ஒவ்வொருமாதம் 10ஆம் திகதியும் எரிபொருள்களின் விலையை நிர்ணயிக்கும் விலைச் சூத்திரத்தை தயாரிக்கும் பக்கம் 11 >>>

## ஜனாதிபதி கொலைச் சதி; முழு விசாரணை தேவை

### மைத்திரியின் ஆலோசகர்கள் வலியுறுத்தல்





கொழும்பு, ஒக். 19

ஜனாதிபதிக்கு எதிரான கொலை முயற்சி தொடர்பில் முழுமையான பரந்துபட்ட விசாரணை அவசியமாகும். இதனைக் பக்கம் 11 >>>

## மஹிந்தவால் புதிய அரசை உருவாக்கிவிட முடியாது!

### உறுதியாகக் கூறுகிறது ஐ.தே.க.

கொழும்பு, ஒக். 19

மஹிந்த அணியினரால் மாற்று அரசையோ அல்லது புதிய அரசையோ உருவாக்க முடியாது என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையக பக்கம் 11 >>>

## ஜனாதிபதியை கொலை செய்யும் அவசியம் றோவுக்குக் கிடையாது

### அடித்துக் கூறுகின்றார் வாசுதேவ

கொழும்பு, ஒக். 19

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கொலை செய்யும் அவசியம் இந்திய புலனாய்வு அமைப்பிற்கு கிடையாது என பக்கம் 02 >>>

## ஆவா குழுவை உருவாக்கியோர் கோப்பாய் பொலிஸாரேதான்!

### சட்டத்தரணி றெமிடியஸ் நீதிமன்றில் காட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 19

ஆவா குழு என்ற ஒன்றை உருவாக்கியது கோப்பாய் பொலிஸார்தான். வாழையே இல்லாத தோட்டத்தில் கைக்குண்டை வைத்துவிட்டு வாழைத் தோட்டத்தில் கைக்குண்டு மீட்டதாகப் பொய் வழக்கைப் போட்டவர்களும் அவர்களே. அவ்வாறானவர்களால் முற்படுத்தப்பட்டுள்ள சந்தேகநபர்கள் அப்பாவிகள். அவர்களைப் பிணையில் விடுவிக்கவேண்டும்.

- இவ்வாறு கடும் பக்கம் 02 >>>

## மூன்று துப்பாக்கிகளுடன் சு.க. அமைப்பாளர் கைது!

கொழும்பு, ஒக். 19

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாவனல்லை தொகுதி அமைப்பாளரும், முன்னாள் மாகாணசபை உறுப்பினருமான இம்தியாஸ் காதர், சட்டவிரோத துப்பாக்கிகள் சகிதம் நேற்றுக் காலை விசேட பக்கம் 11 >>>

காலைக்கதிர்
Kalaikkathir



# வவுனியா நகரசபை அமர்வில் வாகனம் தொடர்பில் சர்ச்சை



வவுனியா, ஒக். 19

வாகன நகரசபைக்குப் புதிய வாகனம் ஒன்று கொள்வனவு செய்யவேண்டும் எனத் தவிசாளர் இ.கௌதமன் சபையில் கருத்து தெரிவித்தையடுத்து நீண்ட விவாதம் ஏற்பட்டது.

வவுனியா நகரசபையின் இம் மாத அமர்வு நேற்றுக் காலை தவிசாளர் இகௌதமன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது வவுனியா நகரசபையில் வாகனப் பற்றாக்குறை உள்ளதாகவும், தவிசாளர், உபதவிசாளர், செயலாளர் ஆகியோர் பாவிப்பதற்கு இரு வாகனங்கள் உள்ளபோதும் அதில் ஒன்று அடிக்கடி பழுதடைவதால் புதிய வாகனம் ஒன்றைக் கொள்வனவுசெய்யலாம் என்றும் தவிசாளர் தெரிவித்தார்.

இதன்போது கருத்துதெரிவித்த நகரசபை உறுப்பினர் நா.சேனாதிராஜா, சபை அமர்வு நிகழ்ச்சி நிரலில் இந்தவிடயம் குறிப்பிடப்படவில்லை. அவ்வாறு தெரிவிக்காத விடயத்தை உடனடியாகக்கொண்டு வந்து தீர்மானமாக நிறைவேற்ற முடியாது எனவும், நகரசபையில் உள்ள வாகனங்களைத் திருத்திப் பயன்படுத்தவேண்டும் என்றும், மேலதிகமாகப் புதியவாகனத்தைக் கொள்வனவு செய்து நிதியை வீண் விரயம் செய்ய முடியாது எனவும் தெரிவித்தார்.

இந்தக் கருத்தை உறுப்பினர்களான ரி.கே.இராஜலிங்கம், க.சந்திரகுலசிங்கம் ஆகியோரும் வலியுறுத்தினர்.

இதன்போது புதிய வாகனம் கொள்வனவு செய்வது எனச் சபையில் ஒருவர் முன்மொழிந்து ஒருவர்வழிமொழியமுற்பட்டபோது, இது ஏகமனதான முடிவு அல்ல என உறுப்பினர்கள் சிலர் தெரிவித்தையடுத்து வாக்கெடுப்புக்குச் செல்வதா என கலந்துரையாடப்பட்டது.

இறுதியில் வாகனக் கொள்வனவு தொடர்பில் அடுத்த அமர்வில் விவாதித்து தீர்மானம் எடுப்பதாக முடிவு செய்யப்பட்டது.

இதன்போது, கடந்த 11 ஆம் திகதி தவிசாளர் குப்பை ஏற்றும் உழவுஇயந்திரத்தில்பயணித்தமை அரசியல் நோக்கம் கொண்ட செயற்பாடுஎனவும்உறுப்பினர்கள் சிலர் கருத்து வெளியிட்டனர்.(ஐ)

## இனி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேன தொடங்கி இலங்கைத் தரப்பினர் பண்ணி வரும் குசும்பைப் பார்க்கும்போது *'இது என்ன சின்னப்பிள்ளைத்தனமாகக் கிடக்கின்றதே...?'*என்றே கேட்கத் தோன்றுகின்றது.

*"தன்னைக் கொல்வதற்கு 'றோ' சதிசெய்கிறது என இலங்கை ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேன அமைச்சரவைக் கூட்டத்தில் கூறினார்."*– என நேற்று முன்தினம் பரபரப்பான செய்திகள் வெளியாகின. ஐந்துக்குக் குறையாத அமைச்சர்கள் இதனை உறுதிப்படுத்தினார்கள் என்ற தகவலின் அடிப்படையில் 'தி ஹிந்து' நாளிதழ் நேற்று முன்தினம் இந்தச் செய்தியை வெளியிட்டமையோடு விடயம் சூடு பிடித்தது.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அன்று காலையில் அவசர அவசரமாகச் சந்திக்கின்றார். மாலையில் பிரதமர் மோடி தொலைபேசி மூலம் இலங்கை ஜனாதிபதியுடன் பேசுகின்றார்.

இவ்வளவு தூரம் விடயங்கள் எல்லாம் சூடு பிடித்த பின்னர், இந்தத் தொலைபேசி அழைப்புத் தொடர்பில் இலங்கை ஜனாதிபதி செயலகம்விடுத்தசெய்திக்குறிப்புத் தான் நகைச் சுவையின் உச்சம்.

இலங்கை – இந்திய நட்புறவு, அபிவிருத்தி பற்றி எல்லாம் இரு தலைவர்களும் பேசினார்கள் என்று தொடங்கி நாட்டின் சுபீட்சம், இரு தரப்பு நெருக்கமான தொடர்பாடல் என்று வழவழா கொழகொழ விவகாரம் எல்லாம் அதில் இருந்தது. ஆனால் தம்மைக் கொல்ல 'றோ' சதி செய்கின்றது என்ற இலங்கை ஜனாதிபதியின் குற்றச்சாட்டுப் பற்றிய செய்தி குறித்து இரு நாட்டு தலைவர்களும் ஏதேனும் உரையாடினார்களா, பேசினார்களா என்பது பற்றி ஒரு வரித் தகவல் கூட அதில் இல்லை.

குறைந்த பட்சம் அப்படி 'றோ' மீது குற்றம் சுமத்தும் கருத்தில் தான்பேசவில்லைஎன்று இலங்கை ஜனாதிபதி, இந்தியப் பிரதமருக்குக் கூறினார் என்ற தகவல் கூட அந்த அறிக்கையில் இடம்பெறவில்லை.

இப்படி ஓர் அறிக்கை வெளியிட்ட ஜனாதிபதி செயலகத்தின் வேலையைப் பார்த்தால் 'இது என்ன சின்னப்பிள்ளைத்தனமாக இருக்கின்றதே!' என்று கூறுவதில் என்ன தப்பிருக்க முடியும்?

ஆனால், இந்தத் தொலைபேசி அழைப்புத் தொடர்பில் இந்தியப் பிரதமரின் அலுவலகம் வெளியிட்ட சிறுகுறிப்பில், தாம் அப்படி 'றோ' மீது குற்றச்சாட்டு எதனையும் முன்வைக்கவில்லை என இலங்கை ஜனாதிபதி இந்த தொலை பேசி உரையாடலின் போது குறிப்பிட்டார் என்று கூறப்பட்டது. இலங்கை ஜனாதிபதியின் அலுவலகம் விடுத்த செய்திக் குறிப்பில் மாத்திரம் அந்த விடயம் ஏனோ மறைக்கப் பட்டுவிட்டது. தொலைபேசி அழைப்பே அந்த விடயம் பற்றியதுதான். அப்படியிருக்க அதை இலங்கை ஜனாதிபதியின் அலுவலகம் மறைத்தது ஏன்?

போதாக்குறைக்கு அரசுத் தரப்பில் இப்படி றோ மீதான கொலை முயற்சிக் குற்றச்சாட்டுத் தொடர்பில் பலரும் வெளியிடும் கருத்துகளைப் பார்க்கும் போது அழுவதா, சிரிப்பதா என்றுதான் தெரியவில்லை.

ஜனாதிபதி மைத்திரிபாலவின் நற்பெயரைக் கெடுக்க சில தரப்புகள் கட்டிவிட்ட கதைதான் இப்படி றோ மீதான குற்றச்சாட்டு என்கின்றார் எஸ்.பி.திஸாநாயக்கா.

சொன்னதுசொன்னதாயிற்று. அது தவறு என்றால் தப்பாகச் சொல்லிவிட்டோம், திருத்திச் சொல்கிறோம் என்றால் விடயம் முடிந்து போய்விட்டிருக்கும்.

அதைச் செய்யாமல் ஒன்றை மறைக்க இன்னொன்று என்று பல கதைகளை இப்போது தொடர்ந்து அவிழ்த்துவிட்டுக் கொண்டிருக்கின்றார்கள் ஆளும் தரப்பினர்.

ஒட்டுமொத்தத்தில் பார்த்தால் இவை அனைத்தும் சிறுபிள்ளைத் தனமான செயற்பாடுகள் அன்றி வேறு யாது?

– மின்னல் –

## ஆவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொனியில் நீதிமன்றில் சமர்ப்பணம்செய்தார் சட்டத்தரணி முடியப்பு றெமிடியஸ்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆடியபாதம் வீதியில் இளைஞர் ஒருவரைத் தாக்கி காயம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் 4 இளைஞர்கள் கடந்த வாரம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் நால்வரும் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

சந்தேகநபர்கள் நால்வரும் இளைஞர் ஒருவரைத் துரத்திச் சென்றனர். அவர்களிடம் இருந்து தப்பிக்க நினைத்த இளைஞன், கிணறு ஒன்றுக்குள் குதித்துள்ளார். கிணற்றுக்குள் வீழ்ந்த இளைஞன் மீது சந்தேகநபர்கள் நால்வரும் கற்களால் தாக்கினர் என்று தமக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் கோப்பாய் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

சந்தேகநபர்கள் நால்வரும் யாழ்ப்பாணம் நீதிமன்றில் பதில் நீதிவான் வி.ரி.சிவலிங்கம் முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டனர்.

சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி முடியப்பு றெமிடியஸ், மன்றில் பிணை விண்ணப்பம் செய்தார்.

ஆவா குழு என்ற ஒன்றை உருவாக்கியவர்களே கோப்பாய் பொலிஸார்தான். இளைஞர்களுக்கு இடையிலான மோதலை வைத்து அவர்களை ஆவா குழு என அடையாளப்படுத்தி இன்று அது பெரும் வன்முறைகளுக்கு வழிவகுத்துள்ளது.

வாழையே இல்லாத தோட்டத்தில் கைக்குண்டு ஒன்றை வைத்துவிட்டுவாழைத்தோட்டத்தில் கைக்குண்டு மீட்டதாகப் பொய் வழக்கைப்போட்டவர்களும் கோப்பாய் பொலிஸார்தான். அவ்வாறானவர்களால் முற்படுத்தப்பட்டுள்ள சந்தேகநபர்கள் அப்பாவிகள். அவர்களைப் பிணையில் விடுவிக்கவேண்டும் என்று சட்டத்தரணி விண்ணப்பம் செய்தார்.

வழக்கை ஆராய்ந்த பதில் நீதிவான், பிரதான நீதிவான் முன்னிலையில் பிணை விண்ணப்பத்தை முன்வைக்குமாறு தெரிவித்து சந்தேகநபர்களின் விளக்கமறியலை எதிர்வரும் 25ஆம் திகதிவரை நீடித்து உத்தரவிட்டார். (ஐ)

# பொலிஸ் சார்ஜன்ட் குணவர்தன மீண்டும் சேவையில் இணைப்பு



கொழும்பு, ஒக். 19

பொலிஸ்சேவையில் இருந்து நீக்கப்பட்டிருந்ததெபுவனபொலிஸ் நிலைய பொலிஸ் சார்ஜன்ட் சனத் குணவர்தன மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

பொலிஸ்மா அதிபரினால் கடந்த செவ்வாய்க்கிழமை மாலைஅவர்மீண்டும்சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டார் எனப்பொலிஸ்ஊடகப்பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ருவண் குணசேகர தெரிவித்தார்.

சேவையில்இருந்துநீக்கப்பட்ட தெபுவன பொலிஸ் சார்ஜன்ட் சனத் குணவர்தன ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனவை கடந்த செவ்வாய்க்கிழமை மாலை சந்தித்தார். ஜனாதிபதி அவருக்கு 10 லட்சம் ரூபா நிதியுதவி வழங்கினார்.

தம்மால் கைப்பற்றப்பட்ட மணல் ஏற்றிய லொறியை தெபுவன பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விடுவித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பொலிஸ் சார்ஜன்ட் குணவர்தன வான்நோக்கித்துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டமையைத்தொடர்ந்து பணியில் இருந்து இடை நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ஐ)

# இளைஞர் ஒருவர் கதறக் கதற கொடூரமாக வெட்டிக்கொலை!

கொழும்பு, ஒக். 19

பலப்பிட்டிய – மீகெட்டுவத்த பிரதேசத்தில் இளைஞர் ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்டு கதறக் கதறக் கொடூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்றுஅம்பலாங்கொடைப்பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

நேற்று இரவு 9 மணியளவில் மீகெட்டுவத்த வயோதிப இல்லத்துக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதுஎன்றும்பொலிஸார் கூறினர்.

தாக்குதலில் படுகாயமடைந்தவர் இரத்தம் சிந்தச் சிந்தப் பலப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

அம்பலாங்கொடைப் பொலிஸாரின் தகவலின்படி இந்தத் தாக்குதல் தனிப்பட்ட குரோதத்தின் விளைவாக ஏற்பட்டுள்ளது.

பலப்பிட்டிய, சிரிசேன மாவத்தையைச் சேர்ந்த 29 வயதான தமித் குமார டி சொய்சா என்ற நபரே உயிரிழந்துள்ளார்.

சடலம் பலப்பிட்டிய வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலின் சந்தேகநபர்அடையாளம்காணப்பட்டுள்ளார். அவரைக் கைதுசெய்வதற்காக அம்பலாங்கொடைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ஐ)

# யாழ். பல்கலை வவுனியா வளாக முதல்வரின் பதவிக்காலம் நீடிப்பு

யாழ் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக முதல்வர் கலாநிதி ரி. மங்களேஸ்வரனின் பதவிக் காலம் 3 வருடங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவளாகத்தின் வளர்ச்சிக்கு பெரும் உறுதுணையாக செயற்பட்டு வரும் கலாநிதி ரி. மங்களேஸ்வரனின் சேவைக்காலம் அண்மையில் முடிவடைந்த நிலையில், யாழ்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் இ. விக்னேஸ்வரனினால் 3 வருடங்களுக்கான கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா வளாகத்தின் வளர்ச்சிக்கு பல்துறைகளினாலும் தனது பங்களிப்பை மேற்கொண்டுவரும் கலாநிதி ரி. மங்களேஸ்வரன்வவுனியாவளாகத்தை வன்னிப் பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கு தன்னாலான முயற்சியைஎடுத்துவரும்நிலையில் இந்தக் கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஜனாதிபதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கொலைசெய்யும் அவசியம் இந்தியப் புலனாய்வு அமைப்புக்குக் கிடையாது. கொலைச் சதித்திட்டம் தொடர்பிலான விசாரணைகளைத் திசை திருப்பவே இவ்வாறான வதந்திகள் பரப்பப்படுகின்றன.

அத்துடன் கொலைச் சதியின் சூத்திரதாரி யார் என்பதைக் கண்டறிய வேண்டுமாயின் நாலக சில்வாவை உடனடியாகக் கைது செய்து தடுப்புக்காவலில் வைத்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நல்லுறவை சீர்குலைப்பதாகவே குறித்த குற்றச்சாட்டு அமைந்துள்ளது – என்றார் (ஐ)

# படைமுகாம்களை மாற்ற நிதியை வழங்கத் தயார்



## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

**கொழும்பு, ஒக். 19**

**தனியார் காணிகளை விடுவிப்பதற்குப் பாதுகாப்புத் தரப்பினர் மாற்றுக் காணிகளை அடையாளப்படுத்தி அதற்கான திட்டங்களை முன்வைத்தால், அதற்குத் தேவையான பணத்தை விடுவிக்கத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பிலான அமைச்சரவை ஆலோசனைக் குழுக் கூட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்று முன் தினம் பிற்பகல் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால, கடந்த வாரம் இடம்பெற்ற வடக்கு – கிழக்குச் செயலணிக் கூட்டத்தில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்குள் தனியார் காணிகளை விடுவிக்குமாறு பணித்துள்ளேன். அதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் என்ன என்று கேட்டுள்ளார்.

முப்படையினரும் தம்வசம் எவ்வளவு காணிகள் இருந்தன? எவ்வளவு காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன? என்ற விவரங்களை ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தினர். இதன்போது கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், விடுவிக்கப்படாத காணிகளை விடுவிக்க வேண்டும் என்று கூறியுள்ளார். எப்படியாயினும் காணிகள் விடுவிக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்துள்ளார்.

'காணிகள் விடுவிப்பில் இராணுவத்தினர் சில சிக்கல்கள் இருப்பதாக, மாவட்டச் செயலகத்தில் கடந்த செவ்வாய் நடந்த கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்கள். தமக்கு மாற்றுக் காணி தேவை என்பதையும், அந்தக் காணிக்கு முகாமை இடமாற்றுவதற்குப் பணம் தேவை என்றும் குறிப்பிட்டார்கள்' என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாதுகாப்புத் தரப்பினர் மாற்றுக் காணிகளை அடையாளப்படுத்தி தமது திட்டங்களைச் சமர்ப்பிக்கட்டும். பணம் வழங்கலாம் என்று கூறியுள்ளார்.

மேலும், அடுத்த மாதம் 8ஆம் திகதி வடக்கு –கிழக்கு அபிவிருத்திக்கான ஜனாதிபதி சிறப்புச் செயலணியின் கூட்டம் நடைபெறவுள்ளது. அதற்கு முன்னதாக, காணி விடயங்கள் தொடர்பில் தனியான கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கோரிக்கை முன்வைத்துள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதனை ஏற்றுக் கொண்டார். (ஐ)

# மைத்திரிபால, கோட்டா கொலைச் சதி: கைதான இந்தியர் 'றோ' உளவாளியே!

## விவரங்களை வெளியிட்டார் விமல்

கொழும்பு, ஒக்.19

ஜனாதிபதி, முன்னாள் ஜனாதிபதி மற்றும் அவரது குடும்பத்தினரைப் படுகொலை செய்யும் சதித்திட்டத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இந்தியர், இந்தியப் புலனாய்வுப் பிரிவான 'றோ'வின் ஓர் உறுப்பினர் என்று மஹிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன் தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர்,

இது தொடர்பாக நாம் நடத்திய விசாரணைகளில், இலங்கையில் கைது செய்யப்பட்ட இந்தியரின் பெயர், ராஜேந்திரகுமார் என்றும், அவர் 'றோ'வில் பணியாற்றுகின்றார் என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த இந்தியரின் 'றோ'



அடையாள அட்டை இலக்கம், ஆர்.பி. 317217/வி.ஜே. ஆகும்.

அவர், 2015 ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இலங்கை வந்துள்ளார். இங்கு தொடர்ந்து தங்கியிருந்து 'றோ'வுக்காகப் பணியாற்றியுள்ளார்.

அவர் இரண்டு முறை என்னைச் சந்திக்க முயற்சித்துள்ளார். ஆனால், நான் அப்போது வீட்டில் இருக்காததால், என்னைச் சந்திக்க முடியவில்லை.

கைதுசெய்யப்பட்ட பின்னர், அவர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்று இந்தியத் தூதரகம் கூறியிருந்தது. இது போன்ற சம்பவங்களைச் சமாளிக்க இது எளிதான வழியாகும்.

இப்போதும் கூட இலங்கையில் 'றோ' செயற்படுகின்றது. ஆனால், ஜனாதிபதி இன்னமும் மௌனமான கொள்கையைக் கடைப்பிடிக்கிறார்.

'றோ'வும், புலம்பெயர் தமிழர்களும் இலங்கையில் சில சூழ்ச்சிகளில் ஈடுபடுகின்றனர் என்பதற்கு இது சான்றாக இருக்கின்றது. இந்த நிலைமை மிகவும் ஆபத்தானது – என்றார். (ஐ)

# 'றோ' கொலைச் சதித் தகவலை வெளியிட்டவரை தேடும் அரசு

## அமைச்சர் சமரசிங்க தகவல்

கொழும்பு, ஒக். 19

அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்ட விடயங்களைத் திரிபுபடுத்தி ஊடகங்களுக்குத் தெரிவித்தவர்கள் தொடர்பில் தேடிப்பார்ப்பது அரசின் கடமையாகும். இந்திய –இலங்கை அரசுகளுக்கிடையில் உள்ள நல்லுறவில் விரிசலை ஏற்படுத்தும் நோக்கத்தில் இது மிகவும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஊடகப்பேச்சாளரும் துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சருமான மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

இந்தியப் புலனாய்வு அமைப்பு தன்னைக் கொலை செய்வதற்கு சதி செய்வதாக ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டத்தின்போது தெரிவித்தார் என இந்து பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

அந்தப் பத்திரிகையின் ஊடகவியலாளர் இந்தத் தகவல்களை அமைச்சரவையில் இருக்கும் 4 அமைச்சர்கள் குறிப்பிட்டதாகவே தெரிவித்திருக்கின்றார்.

ஆனால் இவ்வாறு தெரிவித்தவர்கள் தைரியம் இருந்தால் அவர்கள் தமது பெயர்களை குறிப்பிட்டு தெரிவித்திருக்க வேண்டும். இதுதொடர்பாக அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தின்போது ஆராயவும் எதிர்பார்க்கின்றோம் – என்றார். (ஐ)

# கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம்

## மாணவியின் மரண வீட்டுக்கு செல்ல போக்குவரத்து வசதி இல்லாமையால்



கிழக்குப் பல்கலைக் கழக நிர்வாகம் தமது சக மாணவியின் மரணச் சடங்குக்குச் செல்வதற்குப் போக்குவரத்து வசதி ஏற்படுத்தித் கொடுக்காதமையைக் கண்டித்து கிழக்குப் பல்கலை மாணவர்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிழக்குப் பல்கலைக் கழக கலை, கலாசார மாணவர்களின் ஏற்பாட்டில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

கிழக்குப் பல்கலைக் கழக நிர்வாகக் கட்டட நுழைவாயிலை முற்றுகையிட்ட மாணவர்கள் அமைதியான முறையில் தமது கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை ஏந்திய வண்ணம் அமர்ந்திருந்தனர்.

கடந்த 15 ஆம் திகதி கிழக்குப் பல்லைக் கழகத்தின் கலை, காலாசார பீட யாழ்ப்பாணம் நெடுந்தீவைச் சேர்ந்த டானியல் சில்வேவியா என்ற மாணவி சுகவீனம் காரணமாக உயிரிழந்தார்.

மாணவியின் மரண வீட்டுக்குச் செல்வதற்காகக் கலை, காலாசார பீட மாணவர்கள் பீடாதிபதி ஊடாக கடந்த செவ்வாய்கிழமை போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தித் தருமாறு நிர்வாகத்திடம் கோரிக்கை முன்வைத்திருந்தனர்.

கிழக்குப் பல்கலைக் கழக உபவேந்தர் வெளிநாடு சென்றுள்ளதால் பிரதி உபவேந்தரிடம் இந்தக் கோரிக்கைக் கடிதம் கையளிக்கப்பட்டிருந்தது. இந்தக் கோரிக்கையைப் பல்கலைக்கழக நிர்வாகம் ஏற்றுக்கொள்ளாமல் மறுப்பு தெரிவித்திருந்தது.

நிர்வாகத்தின் இந்தச் செயற்பாட்டைக் கண்டித்தும், வருங்காலங்களில் மாணவர்களைப் பாதிக்கும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது என்ற கோரிக்கைகளை முன்வைத்தும் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (ஐ)

# அபிவிருத்திக்குப் புத்திஜீவிகள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்

## மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை

நாட்டை மீண்டும் அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச்செல்ல, அனைத்துப் புத்திஜீவிகளும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இந்தப் பொறியியலாளர் மாநாடு போன்று இதற்கு முன்னர் எங்கும் இடம்பெற்றதில்லை.

அதுவும் புதிய கட்சி என்றவகையில், இதனை நடத்துவதில் நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். நாட்டில் தற்போது இருக்கும் அரசியல் நிலைமையால் பொறியியலாளர்களுக்கு எவ்வாறான பாதிப்புக்கள் இடம்பெற்றுள்ளன என்பதையும் தெரிந்துக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

எமது காலத்தில், நாட்டில் பல்வேறு கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்டன. யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்ததோடு, அபிவிருத்திகளையும் நாம் மேற்கொண்டிருந்தோம்.

பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மின்சார வசதி மற்றும் வீதிகளை நிர்மாணித்துக் கொடுத்தோம். கிராமங்களை அபிவிருத்தி செய்து, அனைத்து வசதிகளையும் அங்கு கொண்டு சென்றோம்.

அந்தவகையில், நாம் எதிர்காலத்தில் கொள்கைகளை ஸ்தாபிக்கும்போது இவ்வாறான அபிவிருத்திகளுக்கு உதவிய பொறியியலாளர், வைத்தியர்கள் உள்ளிட்ட புத்திஜீவிகளின் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

இதற்கான தருணமும் நெருங்கி வந்துவிட்டது என்பதுதான் எமது நோக்கமாகும். இன்று இந்த நாட்டில் அரசு ஒன்று இருக்கிறதா என்றே தெரியவில்லை.

பிரதமர் ஜனாதிபதியை விமர்சிப்பது, ஜனாதிபதி பிரதமரை விமர்சிப்பது, அமைச்சர்கள் ஒருவருக்கொருவர் குற்றங்களைச் சுமத்திக்கொண்டிருப்பதைத்தான் நாம் தினம்தினம் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

அரசில் இந்த ஒற்றுமையில்லாத செயற்பாட்டினால், இறுதியில் எமது நாட்டு மக்களே பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு, ஒரு கொள்கை இல்லை.

ஆட்சிக்கு வந்து இத்தனை வருட காலத்தில் எந்தவித அபிவிருத்திகளையும் இவர்கள் மேற்கொள்ளாத காரணத்தால் தான் நாடு இந்த நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இதிலிருந்து நாட்டை மீட்டெடுப்பது எமது மட்டுமன்றி அனைத்துப் புத்திஜீவிகளினதும் பொறுப்பாகும் – என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தொடரும் இன ஒதுக்கல்

குற்றமிழைத்த இராணுவத்தினர் பதவி, தராதரம் பாராது தூக்கிலிடப்படுவார்கள் என அமைச்சரவை இணைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அதேசமயம், தமிழ் அரசியல் கைதிகளைத் தாமதமின்றி விடுவிக்க வேண்டும் என்று தெரிவித்து நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கொழும்பில் சந்தித்துப் பேசிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் அச்சமயம் ஒரு விடயத்தை அவருக்குத் தமிழ் மக்களின் கருத்தாகச் சுட்டிக்காட்டினர்.

இந்த இரு நிகழ்வுப் போக்குகளிலும் ஒத்த ஒரு விவகாரம் அமைந்திருப்பது நோக்கற்பாலது.

குற்றமிழைத்த இராணுவத்தினர் பதவி, தராதரம் பார்க்கப்படாது தூக்கிலிடப்படுவார்கள் என நீதி முழங்கி, கருத்து வெளியிட்ட அமைச்சரவைப் பேச்சாளர், லஸந்த விக்கிரமதுங்கவின் கொலையாளிகளை, தாஜுதீன் கொலையாளிகளை, எக்னெலிகொடவைக் கடத்திக் காணாமலாக்கியோரை, கீத் நொயரைக் கடத்தித் தாக்கியோரை, பாலசூரிய, போத்தல ஜயந்த, உபாலி தென்னக்கோன் ஆகியோரைத் தாக்கியோரை சிறையில் அடைப்போம், உரிய முறையில் தண்டிப்போம், 'சிரச' ஊடக நிறுவனம், 'சியத்த' ஊடக நிறுவனம் போன்றவற்றுக்குத் தீ வைத்தோரை உரிய முறையில், சட்ட ரீதியாகக் கையாள்வோம் என்றெல்லாம் முழங்கினார்.

நல்லது. ஆனால், ஊடகவியலாளர்கள், ஊடகங்கள் மீதான தாக்குதல் விடயத்தில் அமைச்சர் ராஜித சேனரத்னவினதும் அவரது அரசினதும் கவனம் – குதிரைக்குக் கண்களைக் கட்டி விட்ட மாதிரி – ஒரே பக்கத்தில் மட்டும் நிற்பது ஏன்?

தெற்கில் இந்த ஊடகவியலாளர்களும், பிரமுகர்களும், ஊடக நிறுவனங்களும் தாக்கப்பட்ட அதேசமயம், வடக்கு, கிழக்கில் தமிழ் ஊடகவியலாளர்கள் மீதும் தமிழ் ஊடகங்கள் மீதும், அதிலும் விட மிக மிக மோசமாகத் தாக்குதல்கள் திட்டமிடப்பட்ட முறையில் நடந்தேறின. அந்த விடயங்கள் குறித்து என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? ஏதேனும் நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா? இந்தக் கொடூரங்களை அரங்கேற்றியோர் குற்றவாளிகள் அல்லரா?

நிமலராஜனில் தொடங்கி, தராகி சிவராம், நடேசன், சுகிர்தராஜன் என்று கொல்லப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் எத்தனை பேர்? 'உதயன்' நாளிதழ் மீது பல தடவைகள் நடத்தப்பட்ட தாக்குதல்களின் சூத்திரதாரிகள் எவரும் இந்த அரசின் கண்களில் இதுவரைப் படாமல்இருப்பதன் மர்மம் என்ன? கடத்தப்பட்டு, தாக்கப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் பலர் இந்த மண்ணில் இன்னும் இருக்கின்றார்களே. அவர்கள் யாரிடமாவது குறைந்தபட்சம் கடந்த கால – இருண்ட ஆட்சிக்கால – அட்டூழியங்கல் குறித்து விசாரணையாவது ஆரம்பித்தீர்களா? இல்லையே. ஏன்?

அதற்கான பதிலை, தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்து முறையற்ற விதத்தில் தடுப்புக் காவலில் வைத்திருக்கும் விடயத்தை ஒட்டி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சுட்டிக்காட்டிய விடயத்தில் காணலாம்.

தமிழ் அரசியல் கைதிகள், அவர்கள் தமிழர்களாக இருக்கின்ற காரணத்தினால்தான் இப்படி அரசு அவர்கள் குறித்து அக்கறை செலுத்தாமல் இருக்கின்றது என்பதே தமிழர்களின் கருத்து நிலைப்பாடாகும் என்று கூட்டமைப்பினர் சுட்டிக்காட்டியிருந்தனர்.

முன்னைய ஆட்சியின் கீழான இருண்ட யுக காலத்தில் தமிழ் ஊடகவியலாளர்கள், தமிழ் ஊடகங்களுக்கு எதிராக இடம்பெற்ற அராஜகங்கள், அட்டூழியங்கள், குறித்து விசாரிக்கப்படாமல், அந்த விடயங்கள் மூடிமறைக்கப்பட்டு இருக்கின்றமைக்கும் அதுதான் காரணம். ஒரே காரணம்.

கொல்லப்பட்டவர்களும், தாக்கப்பட்டவர்களும், பாதிக்கப்பட்டவர்களும் தமிழர்கள். தாக்கப்பட்ட ஊடகங்களும் தமிழ் நிறுவனங்கள்.

ஆகையினால், இந்தத் தமிழ்த் தரப்புகளுக்கு எதிரான தாக்குதல்கள் உட்பட்ட நடவடிக்கைகள் யாவும் 'பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள்' எனப் பட்டியலிடப்பட்டு, விசாரணைக்கு விலக்கானவை என்று ஒதுக்கப்பட்டுள்ளன.

அதனால்தான், தெற்கில் சிங்கள ஊடகவியலாளர்களுக்கு எதிரான தாக்குதல்கள் தொடர்பில் குற்றமிழைத்தோரைத் தூக்கிலிடுவோம் எனச் சூளுரைக்கும் அமைச்சரவைப் பேச்சாளர், வடக்கு, கிழக்கில் தமிழ் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் குறித்து அம்சடக்காக இருக்கின்றார்.

இப்படி நாட்டு மக்களை இன ரீதியாகப் பாகுபடுத்தும் பௌத்த, சிங்களப் பேரினவாத மேலாதிக்கப் போக்கிலிருந்து – காலாதிகாலப் பரவணிப் பழக்கத்திலிருந்து – இந்த நல்லாட்சி அரசும் கூட வெளியே வரவில்லை என்பதற்கு இது ஒரு நல்ல சான்று.

நாட்டு மக்களின் விடயத்தில் இவ்வாறு 'ஒரு கண்ணில் வெண்ணெய், மறு கண்ணில் சுண்ணாம்பு' என்றவாறு இன ஒதுக்கல் போக்கில் இந்த அரசும் கூடத் தொடர்ந்து நடந்து கொள்ளுமாயின் இந்தத் தீவில் நல்லிணக்கமும் புரிந்துணர்வும் கானல்நீர்தான்.

# இன்று விஜயதசமி வெற்றித் திருநாள் விரத மகிமை

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற ஆதி பராசக்தியான அம்பிகைக்குரிய இந்த விஜயதசமி வெற்றித் திருநாள் விரதம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது. 'நவராத்திரி' எனப்படும் ஒன்பது நாள் விரதம் முடிந்து, விஜயதசமி நாளில், அதாவது பத்தாம் நாள், 'தசரா' என்று குறிப்பிடப்படுகின்ற அம்பாளுக்குரிய விரதம் இன்றாகும்.



இது, ஒரு நிறைவு தரும், மங்களகரமான, சுபீட்சமளிக்கும் நல் விரதமாகும். 'விஜய' என்பது வெற்றியைக் குறிக்கும். 'தசமி' என்பது பத்து என்று கூறப்படுகின்றது.

ஆகவே, அம்பிகையானவள் மகிஷாசுரன் எனப்படும் அசுரனை அழிதொழித்த அற்புதத் திருநாள் தான்'விஜயதசமி'என்று கொண்டாடப் படுகின்றது.

முனிவர்கள், தேவர்கள், மானிடர்கள், முனிசிரேஷ்டர்கள் முதலானோருக்கு சொல்லொணாத் துயர்களையும், துன்பங்களையும் விளைவித்த அசுரன் மகிசுரன் 'தானே பிரம்மம்' என்று கூறிக் கொண்டு மூவுலங்களையும் ஆட்டிப் படைத்தான். அவனுடைய தொல்லை தாங்கமுடியாத தேவர்களும் முனிவர்களும் அம்பிகையிடம் முறையிட்டனர்.

அவர்களுடைய வேண்டுதலுக்கு இரங்கிய அம்பிகை உமையவள் அந்த அசுரனை அழிப்பதற்காக எடுத்த மூர்த்தம்தான் மகிசுரமர்த் தினி என்பதாகும். எருமைத்தலை கொண்டவனான மகிஷாசுரன் சக்தியான உமையவளை எதிர்த்துப் போரிட்டான். அதனால் சினங்கொண்ட அம்பிகை சிங்கத்தின் மேலமர்ந்து வந்து தம்முடைய சூலாயுதத்தினால் மகிஷா சுரனைக் கொன்று, அவனது குடலை எடுத்து காகங்களுக்கும் கழுகுகளுக்கும் இரையாக்கினாள் என்று சொல்லப்படுகிறது. அதன் காரணமாக ஆதி பராசக்தியான அம்பிகைக்கு 'மகிஷாசுரமர்த்தனி' என்னும் திருநாமமும் வழங்கலாயிற்று.

இந்த அம்பிகையானவள் தாய்க்குத் தாயாகவும் அன்னைக்கு அன்னையாகவும் சிவனுக்குச் சக்தியாகவும் கணபதிக்கும் கந்தனுக்கும் அருட் தாயாகவும் விளங்குவதோடு வழிபடும் அடியவர்க்கு வினை தீர்க்கும் வித்தகியாகவும் அருள் புரிகின்றமை தெய்வீக அம்சமாகும்.

இன்றைய விஜயதசமி நாளிலேதான் ஏடுதொடக்குதல் எனப்படும் வித்தியாரம்பம், காது குத்துதலெனப்படும் கர்ண வேதனமும். நிகழ்த் தப்படுகின்றன. அத்துடன் புதுக் கணக்குத் தொடங்குதல் மற் றும் நெல் விதைத்தல் முதலியனவும் இந்த விஜயதசமியில் தான் செய்யப்படுகின்றன.

அம்பிகைக்குரிய புனித புண்ணிய நல்விரதமாகிய இந்த விஜயதசமி விரதம் அனுட்டிக்க விரும்புவோர் நவராத்திரி ஒன்பது நாள்களும் நோன்பு காத்து, பத்தாம் நாளில் ஒன்றுமே உண் ணாமல் விரதமிருந்து, கோயில் வாழை வெட்டு முடிந்து, பிற்பாடு பால் பழம் அருந்தி விட்டு மறுநாள் பாறணை பண்ணலாம்.

இந்த விரதத்தை விளையாட்டாக எண்ணி விடலாகாது. சக்தியின் பேரருட் கருணையினால் தான் நாம் இப்பூவுலகில் மனிதர்களாக உலா வருகின்றோம். ஆதலால், இன்றைய விஜயதசமி நன்னாளிலே அம்பிகையை உபாசனை பண்ணி, தேவி தோத்திரங்களைப் பாராயணஞ் செய்து, முடிந்தால் ஏழைகளுக்குத் தானம் கொடுத்து எம்மை புனிதர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

'அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாமே' என்ற திருவாக்கிற்கு இணங்க நவராத்திரி விரதத்தைப் புனிதமாக அனுஷ்டித்து, சகல சௌபாக்கியங்களும் கைவரப் பெற்று நல் வாழ்வில் திளைக்க நம்மை நாமே தயார்படுத்திக் கொள்வோமாக!

'கலாபூஷணம்'
இராசையா சிறிதரன்

## தென்மராட்சி இலக்கிய அணி நடத்தும்

# பாரதி விழா சாவகச்சேரியில் நாளை சிறப்புப் பட்டிமன்றம்

சாவகச்சேரி, ஒக்.19

தென்மராட்சி இலக்கிய அணி நடத்தும் பாரதி விழா நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு, சாவகச்சேரி, சங்கத்தானை தமிழ்க் கோட்டத்தில் (கம்பன் கல்லூரி வளாகத்தில்) இடம்பெறும்.

மக்கள் வங்கியின் ஓய்வு நிலை முகாமையாளர் க.சண்முகநாதன் தம்பதியினர் மங்கல விளக்கேற்ற ஆரம்பமாகும் இந்த பாரதி விழாவில் தலைமையுரையை ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா ஆற்றுவார். தமிழ்மணி அகளங்கன் 'அக்னிக்குஞ்சு' என்ற பொருளில் எழிலுரை நிகழ்த்துவார்.

தொடர்ந்து சிறப்புப் பட்டிமண்டபம் இடம்பெறும். பாரதியைப் பெரிதும் கவர்ந்தவர்கள் தேசத் தலைவர்களே! தெய்வீக ஞானிகளே! என்ற பொருளில் நடைபெறும் இந்தப் பட்டிமண்டபத்தில் 'தேசத் தலைவர்களே' என்ற தரப்பில் ச.மார்க்கண்டு, பரா.ரமேஷ் ஆகியோரும், 'தெய்வீக ஞானியர்களே!' என்ற தரப்பில் ச.லலீசன், நா.நவராஜ் ஆகியோரும் வாதிடுவர்.

நடுவராக ந.விஜயசுந்தரம் கடமை யாற்றுவார்.

அனைவரையும் வருகை தருமாறு கோரி, வரவேற்க வாஞ்சையோடு காத்திருக்கின்றார்கள் தென்மராட்சி இலக்கிய அணியினர். (இ)

# தென்மராட்சி கலாமன்றம் நடத்தும் கலாசாரப் பெருவிழாவும் நாளை

தென்மராட்சி கலைமன்றம் நடத்தும் கலாசாரப் பெரு விழா நாளை பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி சிவன்கோவிலடியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் மன்றத் தலைவர் க.மோகனராஜலிங்கம் தலைமையில் நடைபெறும்.

வடமாகாணசபை உறுப்பினர் சட்டத்தரணி கேசவன் சயந்தன் பிரதம விருந்தினராகவும், வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் அந்தோனிப்பிள்ளை பத்திநாதன் சிறப்பு விருந்தினராகவும், தென்மராட்சி உதவிப் பிரதேச செயலாளர் செல்வி வினோஜிதா கணேசநாதன் கௌரவ விருந்தினராகவும் இந்நிகழ்வில் கலந்து கொள்வர்.

மீசாலை சிவசக்தி சங்கீத நர்த்தனாலய மாணவர்கள் தமிழ்த் தாய்வாழ்த்து இசைப்பர். சித்தார்த்தன், பிரதித்தன் குழுவினரின் மங்கல இசையைத் தொடர்ந்து திருமதி விமலகுமாரி சிறீரவிகுலனின் நெறியாள்கையில் வரவேற்பு நடனம் இடம்பெறும்.

மன்றத்தின் உப தலைவர் ஆ.தில்லைநாதன் வரவேற்புரையை நிகழ்த்த, யாழ்ப்பாணம் தமிழ்ச்சங்கத்தலைவர் ச.லலீசன் வாழ்த்துரை வழங்குவார்.

தொடர்ந்து கவிஞர் த.நாகேஸ்வரன் தலைமையில் ' எங்கள் பண்பாடு படும்பாடு'என்ற தலைப்பில் நடைபெறும் கவியரங்கில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் செ.செல்வறமணன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரதம முகாமைத்துவ உதவி யாளர் செ.சுதாகரன் ஆகியோர் பங்கேற்பர்.

மட்டுவிலூர் தெ.திருவேலழகனின் கர்நாடக சங்கீத இசை விருந்து, திருமதி விமலகுமாரி சிறிரகுலனின் நெறியாள்கையில் காவடி நடனம், திருமதி புனிதகுமாரி ஈழநேசனின் நெறியாள்கையில் குழுப் பாடல்கள் மற்றும் திருமதி சுபத்திராதேவி ஸ்ரீஸ்கந்தராஜா, சிறி.யதுர்ஷன் ஆகியோரின் நெறியாள்கையில் இசைக் கருவிகளின் சங்கமம் ஆகியவையும் இந்த நிகழ்வில் இடம்பெறும்.

**நாளை**
20.10.2018
சனிக்கிழமை
நட்சத்திரம்: சதயம் நாள் முழுவதும்
திதி : ஏகாதசி. மு.இ. 7.45 வரை
சுபநேரம் : 3.02 – 4.32 வரை
இராகுகாலம் : 9.02 – 10.32 வரை

# தற்கொலைகளை தடுப்பது குறித்து வவுனியாவில் நேற்றுக் கருத்தரங்கு





வவுனியா, ஒக். 19

உலக உளநல தினத்தை முன்னிட்டுத் தற்கொலைகளைத் தடுப்பது தொடர்பான கருத்தரங்கு ஒன்று வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா பிரதேச செயலகம் மற்றும் இறம்பைக்குளம்ஈஷிமின்பூரணசுவிசேசபைஇணைந்து ஏற்பாடு செய்த இந்தக் கருத்தரங்கு நகரசபை கலாசார மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வவுனியா பிரதேச செயாளர் கா.உதயராசா, வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரி.எஸ்.எம்.என்.தென்னக்கோன், உதவி பொலிஸ் அத்தியட்சகர், வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, இறம்பைக்குளம் ஈஷி மின் பூரண சுவிசே சபையின் பிரதான பிப் பி.என்.இராஜசிங்கம், வவுனியா வைத்தியசாலையின் உள நலப்பிரிவு வைத்தியர், வவுனியா வைத்தியசாலையின் சிரேஷ்ட உளநலப்பிரிவு வைத்தியர், வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபைத் தலைவர், வவுனியா வடக்கு பிரதேச சபைத்தலைவர், உறுப்பினர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

வவுனியாவில் முதற் தடவையான ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வுகளின் அடிப்படையில் பாடசாலைகள், கிராமங்கள் எனத் தொடர்ந்து இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் தொடர்ந்து இடம்பெறவுள்ளன. உளநல வைத்தியர்களின் ஆலோசனைகள், சிறப்புக் கருத்தரங்கு இடம்பெற்றமையுடன் தற்கொலை தொடர்பான விழிப்புணர்வுகள், ஆலோசனைகளும் வழங்கப்பட்டவுள்ளன. (ஐ-100)

# எரிவாயு விலை அதிகரிப்புக்கு இனிமேலும் அனுமதியில்லை

## அரசு திட்டவட்ட அறிவிப்பு

சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிப்பதற்கு அரசு அனுமதிக்கப் போவதில்லை என கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சில் நேற்றுக் காலை எரிவாயு நிறுவனத்தின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

உலக சந்தையில் பெற்றோலியப் பொருள்களின் விலை மாறுபட்ட வகையில் அடிக்கடி அதிகரித்தாலும், அரசு எரிவாயு உட்பட நுகர்வுப் பொருள்களின் விலையை அதிகரிக்க இடமளிக்கமாட்டாது.

இந்தச் சந்தர்ப்பத்திலே உங்களது உதவியும் ஒத்துழைப்பும் எமக்கு மிகவும் முக்கியமானது. நுகர்வோரை பாதுகாப்பதற்கே நாம் முன்னுரிமை வழங்குகின்றோம் –என்றார்.

போக்குவரத்துச் செலவு உட்பட இதர செலவுகள் அதிகரித்துவிட்டன. சமையல் எரிபொருள்களின் விலைச்சூத்திரத்துக்கு இரண்டு தரப்பினரும் ஏற்கனவே இணங்கியிருந்தபோதும், போக்குவரத்து மற்றும் இதர செலவுகள் காலத்துக்குக் காலம் அதிகரித்து வருவதனால், சமையல் எரிவாயுவின் விலை அதிகரிப்பை மீளாய்வு செய்யுங்கள் என்று அமைச்சர்களிடம், லிட்ரோ காஸ் லங்கா நிறுவனத்தின் பிரதிநிதிகள் அழுத்தமாகத் தெரிவித்தனர்.

2007 ஆம் ஆண்டு தொடக்கம் டீசல் விலை தொடர்ச்சியாக அதிகரித்து வருவதால், சமையல் எரிவாயுவைக் கொண்டு செல்லும் போக்குவரத்துச் செலவும் படிப்படியாக அதிகரித்துவிட்டது. எனவே, இலாபமீட்டலில் சரிவே காணப்படுகின்றது.

இந்த விலை அதிகரிப்பினால் தொழிற்சாலைகள் இயங்க முடியாத நிலை ஏற்பட்டு, மூடவேண்டிய அபாயத்துக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. எனவே, சமையல் எரிவாயுவின் விலையை மீளாய்வு செய்யுமாறு அவர்கள் இந்தச் சந்திப்பின்போது கோரிக்கை விடுத்தனர்.

சமையல் எரிவாயு விநியோகஸ்தர்கள் தொடர்ந்தும் தமது சேவையை, நுகர்வோரைப் பாதிக்காத வகையில் மேற்கொள்ள வேண்டும். உலக சந்தையில், சர்வதேச மசகு எண்ணெயின் விலை உயர்வடைந்துள்ளதால், இலங்கையர்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் நுகர்வோரை மேலும் பாதிப்படையச் செய்யும் வகையில், சமையல் எரிவாயுவின் விலையை அதிகரித்தால், அது நுகர்வோரை மேலும் கஷ்டத்துக்கு உள்ளாக்கும் என்று அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

இதன்போது, லிட்ரோ காஸ் லங்கா நிறுவனத்தின் பிரதிநிதிகள் விலைச்சூத்திரம் தொடர்பான முன்மொழிவொன்றை அமைச்சரிடம் கையளித்தனர். அதனைப் பெற்றுக்கொண்ட அமைச்சர் ரிஷாட் பதியுதீன், வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவையின் உபகுழுவிடம் சமர்ப்பித்து, இது தொடர்பில் பரிசீலனை செய்வதாகத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்ந்தும் அதிகரித்துள்ளதால் உலக சந்தையில் எரிபொருள் பீப்பாயின் விலை அதிகரித்தது. இதன் காரணமாக கடந்த மாதம் எரிவாயு விலையை அரசு உயர்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தீவகத்தில் கடலட்டை வளர்ப்பு; டக்ளஸ் தேவானந்தா ஆராய்வு



தீவகப் பகுதியில் கடலட்டை வளர்ப்பில் ஈடுபட விரும்பும் துறைசார் தொழிலாளர்களுக்கான விசேட கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தின்போது அனலைதீவு,நயினாதீவு,ஊர்காவற்றுறை,வேலணை போன்ற பகுதிகளில் கடலட்டை வளர்ப்பதில் உள்ள சாதக பாதகங்கள் தொடர்பில் தேசிய நீர்வாழ் உயிரின அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் நிருபராஜ் விளக்கமளித்தார்.

இதன்போது கடலட்டை வளர்ப்பு, அதன் அறுவடை தொடர்பிலும் சந்தைப்படுத்தல் தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டது.

# பிரபாகரனை 'லைக்' செய்த இளைஞர் பத்து மாதங்களுக்குப் பின்னர் பிணை

கொழும்பு, ஒக். 19

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளைப் பிரபாகரனின் படத்துடன் பதிவிடப்பட்ட வாழ்த்துச் செய்தியை லைக், ஷேர் செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைதான தமிழ் இளைஞர் ஒருவரை 10 மாதங்களுக்குப் பிறகு நேற்று முன்தினம் புதன்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதித்தது.

சர்ச்சைக்குரிய பேஸ்புக் பதிவொன்றை மையப்படுத்தி இரத்தினபுரியைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் கைதுசெய்து, சிறையில் அடைத்தனர்.

இந்த ஆண்டு ஆங்கிலப் புத்தாண்டு தினத்தில் வாழ்த்துச் செய்தியொன்று பேஸ்புக்கில் பதியப்பட்டுள்ளது. தினேஸ் குமார் என்ற இளைஞனே குறித்த சர்ச்சையான பதிவை பேஸ்புக்கில் பதிவிட்டுள்ளார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தப் பதிவை லைக் செய்ததாகவே விதுசன் என்ற இளைஞனும் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

விதுசனுக்கு பிணை வழங்கவேண்டுமெனக் கோரி தாக்கல் செய்த மீளாய்வு மனுவைக் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சம்பா ஜானகீ ராஜரத்ன நேற்று முன்தினம் புதன்கிழமை ஆராய்ந்தார். இறுதியாக விதுசனைப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி, முன்னாள் இராஜாங்க அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனுக்கு ஒரே நாளில் பிணை வழங்க முடியுமெனில், லைக் செய்த இந்த இளைஞனை 10 மாதம் தடுத்துவைத்திருந்தது எவ்வகையில் நியாயம் எனவும்வினவியுள்ளார்.

சர்ச்சைக்குரிய வாழ்த்துச் செய்தியைப் பதிவிட்ட குற்றச்சாட்டில் கைதான தினேஸ் குமார் என்ற இளைஞருக்கு பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை இல்லாத காரணத்தால் அவருக்குப் பிணை பெறுவதில் சிக்கல் இருப்பதாக வழக்கறிஞர்கள் தெரிவித்தனர்.

### வாழ்த்துச் செய்தியில் என்ன இருந்தது?

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளைப் பிரபாகரனின் படமும், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இலச்சினையும் அந்தப் பதிவில் இருந்ததாக முறையிடப்பட்டுள்ளது. நண்பர் ஒருவர் பகிர்ந்திருந்த ஒரு பதிவை தனது பேஸ்புக்கில் விதுசன் என்ற இளைஞர்,லைக் செய்து, ரே் செய்துள்ளார் என குற்றசம் சாட்டப்பட்டுள்ளது. இது குறித்து முன்னதாக இரத்தினபுரி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. பின்னர் இந்த விவகாரம் தேசிய பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் முறையிடப்பட்டுள்ளது.

விதுசன் கைதுசெய்யப்படும்போது அவருக்கு 18 வயது பூர்த்தியாகவில்லை. எனவே அவர் சிறுவர் நன்னடத்தை மையத்தில் கடந்த ஜூலை மாதம் வரை தடுத்து வைக்கப்பட்டிருந்தார். 18 வயது பூர்த்தியான பின்னர் கொழும்பு விளக்கமறியலில் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டார்.

என்ன நடந்தது என்பது குறித்து கைதுசெய்யப்பட்ட இளைஞர் விதுசனின் தயார் விவரித்தார்.

"குடும்பத்தில் கஷ்டம். மகன் சின்ன வயதில் வேலைக்குப் போனார். நானும் நோயாளி. இன்னும் இரண்டு பிள்ளைகள் உள்ளனர். வீட்டுக் கஷ்டத்தைப் பார்த்து மகன் வேலைக்குப் போனார். அவருக்கு 17 வயது தான் ஆகிறது. மகனே வேலைக்குச் சென்று குடும்பத்தைப் பார்த்தார். இதன் போதுதான் பேஸ்புக்கில் லைக், ஷேர் செய்த சம்பவம் நடந்துள்ளது.

அதிகாரிகள் இது குறித்து விசாரித்து வீட்டிற்கு வந்தனர். 2018 ஆம் ஆண்டு ஜனவரி 6 ஆம் தேதி கொழும்பிற்கு அழைத்துவந்து நாமே எமது பிள்ளையைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைத்தோம்.

அவர் தப்பு பண்ணிதாகக் கூறியே சிறையில் அடைத்துள்ளார்கள். 10 மாதங்களாக மகன் சிறையில் வைக்கப்பட்டுள்ளார். அறியாமையினால் மகன் இதனைச் செய்துள்ளார். ஆனால் மகனை பழிவாங்க வேண்டும் என்பதற்காகவே சிலர் அவருக்கு எதிராக முறையிட்டுள்ளனர்." என்று தாயார் கூறினார்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் புகைப்படத்துடன், அந்த அமைப்பின், இலச்சினையுடன் புதுவருட வாழ்த்து, பேஸ்புக்கில் காட்சிப்படுத்தல், பகிர்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் இவ்விரு இளைஞர்கள் மீதும் சுமத்தப்பட்டுள்ளன.


சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை சட்டத்தின் கீழ் இனங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் நோக்கில் இந்தச் செயல் அமைந்ததா என்பதுகுறித்து தேடப்படுகிறது. 2007ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ஐ.சி.சி.பி.ஆர்.சி. சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய அந்தப் பதிவு லைக் செய்யப்பட்டிருந்தால் அது குற்றமாகாது எனவும் ஷேர் செய்திருந்தால் அது குற்றத்தின் கீழ் வரும் எனவும் கொழும்பு மேல் நீதிமன்றில் விதுசன் பிணை மனு மீதான விசாரணைகளின்போது சட்டமா அதிபர் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த அரச வழக்கறிஞர் ஒருவர் கூறியிருந்தார்.

சர்ச்சைக்குரிய பதிவு ஷேர் செய்யப்பட்டுள்ளதா, லைக் பண்ணப்பட்டுள்ளதா? ஷேர் செய்யப்பட்டிருந்தால் எவ்வளவு தூரம் பேஸ்புக் மூலம் பரவியிருக்கிறது என்பது உள்ளிட்ட விவரங்களை சமர்ப்பிக்குமாறு பேஸ்புக் நிறுவனத்திடமிருந்து அறிக்கை கோரப்பட்டுள்ளது. (ஐ)

# ரஷ்யாவில் கல்லூரிக்குள் புகுந்து மாணவன் சூடு; 19 பேர் உயிரிழப்பு

## எழுபது பேர் வரை கயமுற்றனர்







மொஸ்கோ,ஒக்.19

ரஷ்யாவில் கல்லூரி ஒன்றில் மாணவர் ஒருவர் புகுந்து துப்பாக்கி சூடு நடத்தியதில் 19 பேர் கொல்லப் பட்டு இருக்கிறார்கள்.

அமெரிக்காவில் மாணவர்கள் கல்லூரிக்குள் புகுந்து துப்பாக்கி சூடு நடத்துவது வழக்கம். ஆம், வழக்கம் என்று சொல்லும் அளவிற்கு அமெரிக்கா வில் துப்பாக்கி கலாச்சாரம் விஸ்வரூபம் எடுத்துள் ளது.

ஆனால் ரஷ்யாவில் மாணவர்கள் தாக்குதலுக்கு பதிலாக தீவிரவாதிகள் தாக்குதல்தான் அடிக்கடி நடக்கும். இந்த நிலையில் முதல்முறையாக தற்போது ரஷ்யாவில் மாணவர் ஒருவர் கல்லூரிக்குள் புகுந்து துப்பாக்கியால் சுட்டு இருக்கிறார்.

**கொலை செய்தார்**

விளாடிஸ்லவ் ரோஸ்லியாகோவ் என்ற 18 வயது மாணவர்தான் இந்த துப்பாக்கி சூட்டை நடத்தினார். ரஷ்யாவின் கிரிமையாவின் கெர்ச் என்ற பகுதியில் உள்ள கல்லூரியில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. இதில் மொத்தம் 19 பேர் பலியாகி உள்ளனர். 70 பேர் காயமடைந்து இருக்கிறார்கள்.

**இதுதான் கனவு**

துப்பாக்கி சூடு நடத்திய விளாடிஸ்லவ் ரோஸ்லியாகோவிற்கு இதுதான் தனக்கு கனவு என்று கூறப்பட்டுள்ளது. 1999இல் அமெரிக்காவின்கொலம்பைன்பள்ளிக்கூடத் தில் எரிக் ஹாரிஸ் என்ற மாணவர் நடத் திய துப்பாக்கி சூட்டில் 13 பேர் பலியானார் கள். அதேபோல் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டும் என்று ஆசைப்பட்டு அதேபோல் உடை அணிந்து துப்பாக்கிச் சூடு நடத்தி இருக்கிறார் இவர்.

**மனநிலை எப்படி?**

இதுதான் கனவு என்று கூறினாலும், இவரதுமனநிலைநன்றாகவேஇருந்துள்ளது. ரஷ்யாவில் மனநிலை சோதனை செய்த பின்தான் துப்பாக்கி வழங்குவார்கள். இவர் அந்த சோதனை எல்லாம் முடித்துவிட்டுத் தான் துப்பாக்கி வாங்கி உள்ளார்.

**தற்கொலை செய்தான்**

கடைசியாக 19 பேரையும் சுட்டுவிட்டு அவர்களை கல்லூரி நூலகத்திற்குத் தூக்கி கொண்டுசென்றுள்ளார்.



கடைசியில் அதே இடத்தில் வைத்துத் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார். இந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது. இதில் விளாடிஸ்லவ் ரோஸ்லியாகோவின் தோழிக்கும் காயம் ஏற்பட்டுள்ளது.

# பத்திரிகையாளர் கசோகியின் தலையைத் துண்டிக்க முன் விரல்களை வெட்டிக் கொடூரமாகச் சித்திரவதை செய்தனர்

## ஓடியோ ஆதாரம் இருப்பதாக துருக்கி அரச நாளிதழில் தகவல்

துருக்கியில் பத்திரிகையாளர் ஜமால் கசோகி தலை துண்டித்து கொலை செய் யப்பட்டார் எனவும், இதற்கு ஓடியோ ஆதா ரங்கள் உள்ளன எனவும் துருக்கியின் அரசு நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் 'வொஷிங்டன் போஸ்ட்' பத்திரிகையில் பணிபுரிந்து வந்த பத்திரிகையாளர் ஜமால் கசோகி, சவுதி அரசு குறித்து விமர்சனம் செய்து பல்வேறு கட்டுரைகளை வெளியிட்டு வந்தார். இந்நிலையில், தனது திருமணத்தை முன்னிட்டு சில ஆவணங்களை வாங்கு வதற்காக துருக்கியின் இஸ்தான்புல்லில் உள்ள சவுதி தூதரகத்துக்கு கடந்த 2ஆம் தேதி கசோகி சென்றுள்ளார்.

அதன் பின்னர் அவர் மாயமானார். இந்தச் சம்பவத்திற்கு அமெரிக்க ஜனாதி பதி டிரம்ப்கடும்கண்டனம்தெரிவித்துள்ளார்.

அமெரிக்கவெளியுறவுத்துறைஅமைச் சர் மைக் பாம்பியோ இந்த விவகாரம் தொடர்பாக சவுதி அரசிடம் செவ்வாயன்று நேரடியாகப் பேச்சு நடத்தினார். கசோகி கொல்லப்பட்டமைக்கான வீடியோ, ஓடியோ ஆதாரங்கள் கிடைத்துள்ளன எனக் கடந்த வாரம் துருக்கி அரசு தெரிவித்தது. அவர் கொல்லப்பட்டதாகவும் அது தெரிவித்தது.

ஆனால், இந்த குற்றச்சாட்டுக்களை மறுத்து வந்த சவுதி அரசு, விசாரணையின் போது தவறுதலாக கசோகி கொல்லப்பட்டு இருக்கலாம் என்று பாம்பியோவிடம், இப்போது அறிக்கை தாக்கல் செய்ய உள்ளதாகத் தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில், கடந்த 2ஆம் திகதி கசோகி, சவுதி தூதரகத்தில் ஒவ்வொரு விரலாகத் துண்டித்துச் சித்ரவதை செய்யப்பட்ட பின்பு தலை துண்டிக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளார் எனத் துருக்கியின் அரசு நாளிதழ் 'யேனி சபாக்' செய்தி வெளியிட்டுள்ளது.

சவுதியின் 15 பேர் கொண்ட குழுவினர் கசோகியை கொன்றனர் எனத் துருக்கி ஏற்கனவே தெரிவித்துள்ளது. இந்நிலை யில், யேனி சபாக்கில் வெளியிடப்பட்டுள்ள செய்தியில், எங்களுக்கு கிடைத்துள்ள பல்வேறு ஓடியோ ஆதாரங்களின்படி, கடந்த 2ஆம் திகதி சவுதியின் தூதரகத் தின் உள்ளே கசோகியின் விரல்கள் துண் டிக்கப்பட்டுசித்திரவதைசெய்யப்பட்டுள்ளார். சுமார் ஏழு நிமிட நேரச் சித்திரவதையைத் தொடர்ந்து, அவரதுதலைதுண்டிக்கப்பட்டுள் ளது. இந்தசம்பவத்தின்போது துருக்கியின் சவுதி தூதர் முகமது அல் ஓட்டாய்பி, ''இந்தச் சித்ரவதையை வெளியில் செய்யுங்கள், நீங்கள் என்னை பிரச்சினை யில் சிக்க வைக்க முயற்சி செய்கிறீர்கள்" என்று கூறுகிறார். அதற்கு நபர் ஒருவர், ''நீ சவுதிக்கு வந்து உயிருடன் வாழ வேண்டும் என்று கருதினால் வாயை மூடிக் கொண்டு சும்மா இரு"என்று மிரட்டு கிறார். - இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர் கசோகி சவுதித் தூதரகத்துக்குள் செல்ல முன்னர் தமது 'அப்பிள்' ரகத் தொலைபேசியை தூதரகத்துக்கு வெளியில் தனக்காகக் காத்து நின்ற தனது காதலியிடம் ஒப்படைத்துச் சென்றார் என்றும் –

அச்சமயம் அவர் தமது கையில் கட்டி யிருந்த மணிக்கூடு மூலம் அவரைச் சூழப் பேசப்பட்ட விடயங்கள் எல்லாம் அவ ரது அப்பிள் ரகக் கைத்தொலைபேசியில் பதிவாகிக் கொண்டிருந்தன என்றும் –

அதுவே, அவரது கொலை தொடர்பான புதிரை விடுவிக்கும் ஆதாரமாகியிருக்கின் றது என்றும் – கூறப்படுகின்றது.

# பத்திரிகையாளர் கசோகி கொலை பற்றிய ஆதாரங்களைக் கோருகின்றார் டிரம்ப்

துருக்கியில் உள்ள சவுதி அரேபியத் துணைத் தூதரகத்துக்குள் சென்ற பின் காணாமல் போன சவுதிப் பத்திரிகையாளர் ஜமால் கசோகி கொல்லப்பட்டார் என் பதைக் காட்டும் பதிவுகள் இருந்தால் கொடுங்கள் என்று துருக்கியைக் கேட்டி ருப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்தார்.

வெள்ளை மாளிகையில் நடந்த செய்தி யாளர்கள் கூட்டத்தில் பேசும்போது டிரம்ப் இதைத் தெரிவித்தார்.

ஒக்டோபர் 2ஆம் திகதி இஸ்தான் புல்லில் உள்ள சவுதித் துணைத் தூதர கத்துக்குள் சென்ற பின்னர் கசோகியைக் காணவில்லை. தாங்கள் அவரைக் கொல்லவில்லை என்றும், வந்த வேலை முடிந்து அவர் திரும்பிவிட்டார் என்றும் கூறுகிறது சவுதி அரேபியா.

இதனிடையே காணாமல் போவதற்கு முன்பாக ஜமால் கசோகி எழுதியதாகக் கூறப்படும் கடைசிப் பத்தியை வெளியிட் டுள்ளது வாஷிங்டன்போஸ்ட் நாளிதழ். மத்தியக் கிழக்கு நாடுகளில் சுதந்திரமான ஊடகத்துக்கான தேவை குறித்து அந்தப் பத்தியில் கசோகி வலியுறுத்தியுள்ளார்.

கசோகி பாதுகாப்பாகத் திரும்பிவருவார் என்ற நம்பிக்கையில், இந்தப் பத்தியை வெளியிடாமல் தாமதம் செய்ததாக அந்த நாளிதழின் உலக கருத்துப் பிரிவு ஆசிரி யர் கரேன் ஆட்டியா தெரிவித்துள்ளார்.

தற்போது அது நடக்கப்போவதில்லை என்பதை நான் ஒப்புக்கொள்ளவேண்டும். நான் கடைசியாக எடிட் செய்யும் அவரது கட்டுரை இது என்று கூறிய அவர், அரபு உலகத்தில் சுதந்திரம் நிலவவேண்டும் என்பதற்கு அவர் காட்டிய அக்கறையை யம், ஆர்வத்தையும் இந்த பத்திக் கட்டுரை சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது. இந்த சுதந்திரத்துக்காகவே அவர் தமது உயிரைக் கொடுத்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.



வாஷிங்டன் போஸ்ட் வெளியிட்ட அந்த கடைசி பத்தியில் –

அரபு உலகம் தம்முடைய சொந்த இரும்புத்திரை சூழ்நிலையை எதிர் கொண்டுள்ளது. இந்த இரும்புத்திரை வெளிநாட்டு சக்திகளால் உண்டானதல்ல.

அதிகார தாகத்தில் உள்நாட்டு சக்தி களே உருவாக்கியது. அரபு உலகத்துக்கு நவீனமான பன்னாட்டு ஊடகம் வேண் டும். இதன் மூலமே உலக நடப்புகளை குடிமக்கள் தெரிந்துகொள்ள முடியும். மிக முக்கியமாக, அரபுக் குரல்கள் ஒலிப் பதற்கான ஒரு தளத்தை உருவாக்கவேண் டும் – என்று கசோகி எழுதியுள்ளார்.

தமது சக சவுதி எழுத்தாளர் சலே அல்– சலே தற்போதைய சவுதி அரசாங்கத்தின் கருத்துக்கு மாறான கருத்தை எழுதி யதற்காக தேவையில்லாமல் ஐந்தாண்டு கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள் ளார் என அந்தக் கட்டுரையில் குறிப்பிட்ட கசோகி, இத்தகைய நடவடிக்கைகளுக்கு சர்வதேச சமூகம் காக்கும் மௌனம் விரைவில் கண்டனமாக மாறும் என்றும் தெரிவித்துள்ளார்.

# இந்திய ஏவுகணைக்குப் போட்டியாக சீனாவின் சுப்பர்சொனிக் ஏவுகணை





பீஜிங், ஒக்.19

இந்திய - ரஷ்ய கூட்டுத் தயாரிப்பில் உருவான 'பிரமோஸ்' ஏவுகணைக்குப் போட்டியாக சீனா சுப்பர்சொனிக் ஏவுகணைச் சோதனையை வெற்றிகரமாக நடத்தியது.

சீனாவில், சுப்பர்சொனிக் எச்டி-1 ஏவுகணைச் சோதனை நேற்று வெற்றிகரமாக நடந்தது..

சீனாவின் குவாங்டாங் மாகாணம் குவாங்சூவில் உள்ள ஹோங்க்டா என்ற சுரங்க நிறுவனம், இந்தச் சோதனையை நடத்தியது. அந்நிறுவனமே தனது சொந்தச் செலவில் இந்த ஏவுகணையை உருவாக்கி உள்ளது.

இது, இந்திய-ரஷ்ய கூட்டுத் தயாரிப்பில் உருவான 'பிரமோஸ்' ஏவுகணைக்கு போட்டியாகக் கருதப்படுகிறது. ஆனால், பிரமோஸ் ஏவுகணையை விட விலை மலிவானது என்றும், பாகிஸ்தான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு இந்த ஏவுகணை விற்கப்பட வாய்ப்பு உள்ளதாகவும் சீனாவை சேர்ந்த ராணுவ வல்லுனர் வெய் டோங்சு தெரிவித்தார்.

# சக பெண் ஊழியரின் பாலியல் தொந்தரவால் தற்கொலை செய்த மருத்துவப் பணியாளர்

## 'மீ டூ'க்கு மாற்றான 'வீ டூ' இயக்கம் சீற்றம்

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலம் பர்பானி மாவட்டம், பர்பானி நகரைச் சேர்ந்தவர் சச்சின் மிட்கரி (வயது38). இவர் அங்குள்ள மருத்துவமனையில் பணியாற்றி வந்தார். கடந்த ஞாயிற்றுக்கிழமை அவர் தனது வீட்டில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

மிட்கரியின் சடலத்தை பொலிஸார் மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பிவைத்தனர். அப்போது அவர் கடைசியாக எழுதிய கடிதத்தையும் பொலிஸார் கைப்பற்றினர். அதில், சக பெண் ஊழியரின் பாலியல் துன்புறுத்தலால் தாம் தற்கொலை செய்து கொள்கிறார் என மிட்கரி குறிப்பிட்டிருந்தார்.

"எனக்குத் திருமணமாகிவிட்டது. இது அந்த பெண்ணுக்கு தெரியும். ஆனாலும் என்னைப் பாலியல் உறவுக்கு அழைத்துத் துன்புறுத்துகிறார். நான் மறுத்தால் பொலிஸில் முறைப்பாடு செய்வேன் என்று மிரட்டுகிறார். வேறு வழியின்றி தற்கொலை செய்து கொள்கிறேன்" என்று கடிதத்தில் அவர் தெரிவித்திருந்தார்.

தற்கொலைக்குத் தூண்டினார் என சம்பந்தப்பட்ட பெண் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்தியாவில் தீவிரமடைந்து வரும் 'மீ டூ' இயக்கத்தில் ஆண்களுக்கு எதிராக ஏராளமான பெண்கள் பாலியல் முறைப்பாடு தெரிவித்து வருகின்றனர். இதேபோல பெண்களுக்கு எதிராக 'வீ டூ' என்ற இயக்கத்தைச் சில ஆண்கள் தொடங்கியுள்ளனர். அதாவது பெண்களால் பாதிக்கப்பட்ட ஆண்கள், தாங்கள் சந்தித்த பாலியல் துன்புறுத்தல்களை சமூக வலை தளங்களில் பகிரங்கமாக பதிவிட்டு வருகின்றனர். சச்சின் மிட்கரின் தற்கொலைக்கு காரணமான பெண் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று 'வீ டூ' இயக்க ஆதரவாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# காங்கிரஸ் மூத்த தலைவர் என்.டி.திவாரி காலமானார்

காங்கிரஸ் மூத்த தலைவரும், உத்தரப் பிரதேச முன்னாள் முதல்வருமான என்.டி. திவாரி நேற்றுக் காலமானார். அவருக்கு வயது 93. நேற்று அவரது பிறந்த நாளாகும்.

உத்தராகண்ட் மாநிலம் நைனிதால் மாவட்டத்தில் 1925ஆம் ஆண்டு அக்டோபர் 18ஆம் திகதி பிறந்தவர் என்.டி. திவாரி. சுதந்திரப் போராட்ட வீரரான இவர், தனது சிறு வயதிலிருந்தே காங்கிரஸ் கட்சியில் இணைந்து பணியாற்றினார். நாடு சுதந்திரமடைந்ததும் முதன்முதலில் 1952 ஆம் ஆண்டு நைனிதால் தொகுதியிலிருந்து உத்தரப் பிரதேச சட்டப்பேரவைக்கு தேர்வு செய்யப்பட்டார்.

பலமுறை சட்டசபை உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்ட அவர், ராஜீவ் காந்தியின் அமைச்சரவையில் மத்திய அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார். 3 முறை உத்தரப் பிரதேச முதல்வராகவும், ஒருமுறை உத்தராகண்ட் முதல்வராகவும் அவர் பதவி வகித்துள்ளார்.

கடந்த 2008 இல் ஆந்திர ஆளுநராக இருந்த திவாரி, தனது தந்தை என ரோஹித் என்பவர் டெல்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். இதை திவாரி மறுத்து வந்தபோதும், மரபணு சோதனையில் அது உறுதி செய்யப்பட்டது. இதனால் ஜுலை 27, 2012 இல் தம் மகனுடன் சமாதானம் செய்து கொள்வதாக இருவரும் கூறி வழக்கு வாபஸ் பெறப்பட்டது.



வயோதிபம் காரணமாகத் தீவிர அரசியலில் இருந்து விலகியிருந்த அவர், டெல்லியில் உள்ள தனது மகனின் வீட்டில் வசித்து வந்தார். இந்நிலையில் உடல்நிலை பாதிக்கப்பட்ட அவர் அடிக்கடி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு வந்தார். கடுமையான காய்ச்சல், குறைந்த ரத்த அழுத்தம் காரணமாக டெல்லியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சில மாதங்களுக்கு முன்பு அனுமதிக்கப்பட்டார்.

இந்த நிலையில் அவரது உடல்நிலை மிகவும் மோசமான நிலையில் பிறந்தநாளான நேற்று அவரது உயிர் பிரிந்தது. அவரது மறைவுக்கு பல்வேறு கட்சித் தலைவர்களும் இரங்கல் தெரிவித்தனர்.




# ஓடிக்கொண்டிருந்த ரயிலுடன் மோதி அதைத் தடம் புரள வைத்த லொறி

## சாரதி உடல் நசுங்கிச் சாவு!



போபால், ஒக்.19

மத்திய பிரதேசத்தில் ஓடிக்கொண்டிருந்த எக்ஸ்பிரஸ் ரயிலுடன் ரயில்வேக் கடவையில் சரக்கு லொறி ஒன்று மோதியதில் ரயில் தடம்புரண்டது.

மத்திய பிரதேச மாநிலத்தில் கோத்ரா–ரத்லம் இடையே உள்ள ரயில் கடவை வழியாக நேற்றுக் காலை திருவனந்தபுரம் ராஜ்தானி எக்ஸ்பிரஸ் ரயில் சென்றுகொண்டிருந்தது. ரயில் கடவைக் கதவுகள் மூடப்பட்டு, பிற வாகனப் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டது. அப்போது அந்த வழியாக வேகமாக வந்த ஒரு சரக்கு லொறி, டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து ரயில் கடவைக் கதவுகளை உடைத்து ரயில் மீது பலமாக மோதியது.

கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்த இந்த விபத்தில் ரல்யிலின் இரண்டு பெட்டிகள் தடம்புரண்டன. லொறியின் முன்பகுதியும் நொறுங்கியது.லொறிச் சாரதியும் உடல் நசுங்கி உயிரிழந்தார்.

தடம்புரண்டதால் பாதிக்கப்பட்ட பயணிகள் வேறு பெட்டிகளுக்கு மாற்றப்பட்டனர். பின்னர் ரயில் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றது. அந்த வழிப்பாதையிலன் சீரமைப்பு பணிகள் விரைவில் தொடங்கும் என மேற்கு ரெயில்வே தெரிவித்துள்ளது.


# 10 வருடங்கள் இந்திய ராணுவத்தில் பணியாற்றியவர் பாக். உளவாளியாம்!

இந்திய இராணுவத்தின் முக்கியத் தரவுகளை பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. உளவு அமைப்புடன் பகிர்ந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டில் உத்தரப் பிரதேச மாநிலம் மீரட்டில் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவில் உளவு பார்ப்பதற்காக பாகிஸ்தான் அவரை இந்தியாவுக்கு அனுப்பியிருக்க வாய்ப்பு உண்டு என்று உள்ளூர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என 'தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

இராணுவத்தில் 10 ஆண்டுகளாக பணியாற்றும் அவரது பெயரை இராணுவம் வெளியிடவில்லை. அவர் அடிக்கடி பாகிஸ்தானில் இருப்பவர்களுடன் தொலைபேசியில் பேசியமையால் இராணுவத்தின் நுண்ணறிவுப் பிரிவு அவர் மீது சந்தேகம் கொண்டு கண்காணிக்கத் தொடங்கியது.அதையடுத்தே அவர் கைது செய்யப்பட்டார்.

# 4 புராதன சிலைகள் திருப்போரூரில் மீட்பு




திருப்போரூர்,ஒக்.19

காஞ்சிபுரம் மாவட்டம் திருப்போரூர் அருகே வெண்பேடு அருள்மிகு அகஸ்தீஸ்வரர் கோயில் அருகே புதையுண்டிருந்த நான்கு புராதன சிலைகள் மீட்கப்பட்டுள்ளன.

கோயில் பின்புறம் உள்ள இடத்தை தூர்வாரும் போது 4 சிலைகளைப் பொதுமக்கள் மீட்டனர். தோண்டி எடுக்கப்பட்ட 4 சிலைகளையும் கோயில் நிர்வாகத்தினர் வருவாய் அதிகாரி மூலம் வட்டாட்சியரிடம் ஒப்படைத்தனர்.

# நாடுகளை அச்சுறுத்தும் சீனாவின் கடன் பொறி



சீனஅதிபர் சி ஜின்பிங்கின் இலக்கான , 70 இற்கும் மேற்பட்ட நாடுகளில் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், தொடருந்துப் பாதைகள் போன்ற நவீன வர்த்தகக் கட்டுமானங்களை மேற்கொள்வதற்கான 'ஓர் அணை மற்றும் ஒரு பாதைத் திட்டமானது' அதன் சில அயல்நாடுகளால் நிராகரிக்கப்பட்டுள்ளது.



இத்திட்டங்களுக்கு அப்பால், சீனா இந்த நாடுகளுடன் இருதரப்பு வர்த்தக ஒப்பந்தங்களையும் கைச்சாத்திட்டுள்ளதுடன் அரசாங்கம் மற்றும் வங்கிகளிலிருந்து கடன்களைப் பெற்று புதிய திட்டங்களை மேற்கொள்வதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கைகளிலும் சீனா கைச்சாத்திட்டுள்ளது.

அண்மையில் சீனாவிற்கு உத்தியோக பூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்த மலேசியப் பிரதமர் மகதீர் முஹமட் சீனாவின் அணை மற்றும் பாதைத் திட்டங்களை மிகப் பலமாக எதிர்த்தமை தொடர்பான செய்திகள் வெளியிடப்பட்டன. சீனாவின் அணை மற்றும் பாதைத் திட்டத்தின் கீழ் மலேசியாவில் மேற்கொள்ளப்படவிருந்த கிழக்கு கரையோர தொடருந்து இணைப்பு மற்றும் இரண்டு எரிவாயு குழாய்த்திட்டங்களை மஹதீர் இரத்துச் செய்திருந்தார்.

'சீனாவானது மலேசியாவை கடன்கார நாடாக மாற்ற விரும்பாது என நான் நம்புகிறேன்' என சீனாவின் திட்டங்களை இரத்துச் செய்தமைக்கான காரணம் தொடர்பாக மலேசியப் பிரதமர் அண்மையில் வழங்கிய ஊடக மாநாட்டில் விளக்கமளித்திருந்தார். அணை மற்றும் பாதைத் திட்டத்தின் ஒரு பகுதியாக சீனாவினால் மேற்கொள்ளப்பட்ட ஆழ்நீர்த் திட்டத்தை மலேசியா இரத்துச் செய்திருந்தது.

இதேபோன்று சீனாவினால் மேற்கொள்ளப்பட்ட பாரிய தொடருந்து திட்டத்தை பாகிஸ்தானில் புதிதாக தேர்வு செய்யப்பட்ட அரசாங்கம் இரத்துச்செய்திருந்தது. மாலைதீவில் அண்மையில் இடம்பெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற எதிர்க்கட்சி கூட்டணியின் தலைவர்கள், சீனாவுடன் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைகள் அனைத்தையும் மீளவும் ஆராயவுள்ளதாக உறுதியளித்திருந்தனர்.

சீனாவினால் அபிவிருத்தி செய்யப்பட்ட விமான நிலையத்தின் மூலம் போதியளவு வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில், சீனாவிடமிருந்து பெற்ற கடனைத் திருப்பிக் கொடுப்பதில் சிறிலங்கா பல்வேறு சவால்களைச் சந்தித்த நிலையில், இந்த விமான நிலையத்தை சீனாவிடம் கையளிப்பதாக சிறிலங்கா முன்னர் உறுதியளித்திருந்தது.

சீனாவின் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட பெரும்பாலான நாடுகளில் சீனாவிடம் நெருக்கமான தொடர்பைப் பேணிய அரசாங்கங்களைத் தேர்தலில் தோற்கடிப்பதற்காக மக்கள் வாக்களித்திருந்தனர். இதன்மூலம் குறித்த நாடுகளில் சீன எதிர்ப்பு அரசாங்கங்கள் புதிதாக பதவியேற்றுக் கொண்டன.

ஆழ்கடல் மூலோபாய கடல்துறைமுகத் திட்டம் உட்பட பல்வேறு பாரிய திட்டங்களை மேற்கொள்வதற்கு சீனாவின் உதவியை நாடிய சிறிலங்காவின் முன்னாள் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ, 2015இல் இடம்பெற்ற அதிபர் தேர்தலில் தற்போதைய அதிபரான மைத்திரிபால சிறிசேனவினால் தோற்கடிக்கப்பட்டார்.

புதிதாக சிறிலங்காவில் ஆட்சி அமைத்துக் கொண்ட அரசாங்கம் சிறிலங்கா மீதான சீனாவின் செல்வாக்கு அதிகரிப்பதைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தது மட்டுமன்றி, சீனாவின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களையும் மீளாய்வு செய்தது.

சீன முதலீடுகள் தோல்வியுற்றமை தொடர்பாகவும் இவை நாட்டை கடன் சுமைக்குள் தள்ளியுள்ளமை தொடர்பாகவும் தனது தேர்தல் பரப்புரையின் போது சிறிசேன சுட்டிக்காட்டியிருந்தார்.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் முஸ்லீம் லீக் கட்சியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட 60 பில்லியன் பெறுமதியான சீன – பாகிஸ்தான் பொருளாதார நடைபாதைத் திட்டமானது , அண்மையில் பாகிஸ்தானில் இடம்பெற்ற தேர்தலில் பாகிஸ்தான் தெஹ்ரீக் ஏ இன்சாப் கட்சியின் தலைவர் இம்ரான் கானால்



முக்கியத்துவப்படுத்தப்பட்டது.

இதன் மூலம் இவர் இந்தத் தேர்தலில் வெற்றிபெற்று தற்போது பாகிஸ்தான் பிரதமராகப் பதவியேற்றுள்ளார். சீனாவுடன் நெருக்கமான நட்பைப் பேணும் ஒரு நாடாக பாகிஸ்தான் விளங்குகின்ற போதிலும், தற்போது பதவியேற்ற பாகிஸ்தானின் புதிய அரசாங்கமானது சீனாவின் தற்போதைய மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக ஆராய்ந்து வருகிறது.

சீனாவின் கடன்பொறிக்குள் பாகிஸ்தான் உட்பட்டுள்ளதால், CPEC திட்டங்களுக்கு முதலீடு செய்யக் கூடிய புதிய முதலீட்டாளர்களை தேடும் படலத்தை ஆரம்பித்துள்ளது. அத்துடன் மிக முக்கிய தொடருந்துத் திட்டத்திற்கான செலவை 6 பில்லியன் டொலரிலிருந்து 4 பில்லியன் டொலராகக் குறைத்துள்ளது.

மலேசியாவில் கடந்த மே மாதம் இடம்பெற்ற தேர்தலில் சீனத் திட்டங்களுக்குச் சாதகமாக செயற்பட்ட நஜீப் ரசாக் அரசாங்கத்தை மக்கள் தோல்வியுறச் செய்தனர்.



'சீனாவின் திட்டங்கள் மேற்கொள்ளப்படமாட்டா. தற்போது முன்னுரிமையானது எமது நாட்டின் கடன்சுமையைக் குறைத்துள்ளது. எம்மால் எமது நாட்டின் கடன்களை மீளச் செலுத்தக் கூடிய சூழல் உருவாகும் வரை இந்த நிலை தொடரும். எதிர்காலத்தில் திட்டச் செலவுகளைக் குறைப்பது தொடர்பாக நாம் ஆராய்வோம்.

நாங்கள் இழப்பீட்டை வழங்க வேண்டியிருந்தால் அவற்றை வழங்க வேண்டும். இது முட்டாள்தனமானது. ஆகவே இத்திட்டங்களிலிருந்து வெளியேறுவதற்கான வழியை நாம் கண்டறிய வேண்டும்' என மலேசியப் பிரதமர் மஹதீர் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.



கேந்திர முக்கியத்துவ அமைவிடத்தில் அமைந்துள்ள மாலைதீவின் முன்னைய அரசாங்கமான அப்துல்லா யமீன் அரசாங்கமானது சீன முதலீடுகளுக்கு ஆதரவாக நடந்து கொண்டமையால் அண்மையில் இடம்பெற்ற தேர்தலில் தோற்கடிக்கப்பட்டது. இத்தேர்தலில் வெற்றி பெற்ற எதிர்க்கூட்டணி தற்போது மாலைதீவில் நடைபெறும் சீனத் திட்டங்கள் அனைத்தையும் மீளாய்வு செய்யவுள்ளதாக அறிவித்த நிலையில் குழாய் பொருத்தும் திட்டமானது தற்போது இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

மாலைதீவின் மொத்த வெளிநாட்டு கடன் தொகையில் 70 சதவீதமானவை சீனாவிடம் திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளதாக மாலைதீவின் புதிய அரசாங்கம் கண்டறிந்துள்ளது. மாலைதீவின் வீதிகள், பாலங்கள், விமான நிலையங்கள் போன்றவற்றை அபிவிருத்தி செய்வது தொடர்பாக சீனாவுடன் பல்வேறு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டமைக்கு அப்பால், தனது இராணுவத் தளமாகப் பயன்படுத்தும் நோக்கில் மாலைதீவின் பவளத்தீவுகள் சிலவற்றை சீனா கொள்வனவு செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது.



நாடுகள்தாம் சீனாவின் கடன்பொறிக்குள் அகப்பட்டுவிடக் கூடாது என்கின்ற அச்சமே சீனாவின் முதலீடுகளை நிராகரிப்பதற்கான பிரதான காரணமாகும். அத்துடன் சீனாவின் நிதி சார்



கோட்பாடுகளும் நிபந்தனைகளும் மிகவும் கடும்போக்காகவும் அநீதியானதாகவும் காணப்படுகின்றன.

நாடுகளில் முதலீடுகளை மேற்கொள்வதாகவும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதாகவும் சீனா வாக்குறுதிகளை வழங்குவதன் மூலம் தன்னிடம் கடன்களைப் பெற்றுக் கொள்ளும் நாடுகளுடன் நீதிக்கு மாறான உடன்படிக்கைகளை மேற்கொள்வதுடன் உயர் வட்டி வீதத்தையும் அறவிடுவதால் இந்த நாடுகள் கடன் சுமைக்குள் தள்ளப்படுகின்றன.

'புதிய கொலனித்துவம் இடம்பெறக் கூடிய சூழல் உருவாகுவதை நீங்கள் விரும்பக் கூடாது. ஏனெனில் இதன் மூலம் திறந்த, சுதந்திரமான வர்த்தக நியமங்களின் அடிப்படையில் பணக்கார நாடுகளுடன் வறிய நாடுகள் போட்டியிடக் கூடிய இயலுமைக் கொண்டிருக்கவில்லை' என மலேசியப் பிரதமர் குறிப்பிட்டிருந்தார்.

நன்றி: புதினப்பலகை

# வீதியில் மாணவிகளுக்கு தொல்லை; குடும்பஸ்தர் மீது நான்கு வழக்குகள்

யாழ்ப்பாணம்,ஒக். 19

யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணைப் பகுதியில் இயங்கும் தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்று திரும்பும் மாணவிகளுக்குப் பாலியல் தொல்லை கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள குடும்பத்தலைவருக்கு எதிராக 4 வழங்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

சி.சி.ரி.வி. பதிவுகளின் அடிப்படையில் சந்தேகநபர், வீதியில் சென்ற மாணவிகளைப்பாலியல் ரீதியில் கொடுமைப்படுத்துவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தே அவர் மீது நான்கு வழக்குகளை யாழ்ப்பாணம் பொலிஸார்தாக்கல்செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணைப் பகுதியில் இயங்கும் தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்றுதிரும்பும்மாணவிகளுக்கு வீதியில் வைத்துப் பாலியல் ரீதியான தொல்லை விளைவித்தார் என்று கொட்டடியைச் சேர்ந்த குடும்பத் தலைவர் ஒருவருக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பெண்கள் பிரிவுக்கு முறைப்பாடுகள் கிடைத்தன.

அவர் யாழ். நகரில்நாட்டாமை வேலை பார்ப்பவர். சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்தபெண்கள்பொலிஸ் பிரிவுஉத்தியோகத்தர்கள், அவரை 10ஆம் திகதி கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சந்தேகநபருக்கு எதிராகச் சிறுமிகளுக்குப் பாலியல் தொல்லை கொடுத்தார் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் அவர் முற்படுத்தப்பட்டார்.

விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன், சந்தேகநபரை கடந்த 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இந்த நிலையில் மேலும் சில மாணவிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகளை வழங்கினர். அதனடிப்படையில் அந்த மாணவிகளின் முறைப்பாடுகளை பொலி ஸார் கடந்த செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் முன்வைத்தனர்.

சந்தேகநபர், யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை முற்படுத்தப்பட்டார்.

சந்தேகநபர் மாணவி ஒருவருடன் தவறுதாலாக மோதுண்டார். அந்தக் காட்சியே சிசிரிவியில் பதிவாகியுள்ளது. ஆனால் அவர் மாணவிகளுடன் அங்க சேட்டை விடவில்லை என்று சந்தேகநபரின் சட்டத்தரணி நீதிமன்றில் விண்ணப்பம் செய்தார்.

சந்தேகநபர் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுக்க உத்தரவிட்ட நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன், அவரின் விளக்கமறியலை எதிர்வரும் 30 ஆம் திகதிவரை நீடித்தார். (ஐ)

# மக்கெய்சர் விளையாட்டரங்கு உடற்பயிற்சிக் கூடத்தில் தீ!



திருமலை, ஒக். 19

திருகோணமலை நகராட்சி மன்றத்திற்குச் சொந்தமான மக்கெய்சர் விளையாட்டரங்கின் அமைந்திருந்த உடற்பயிற்சிக் கூடம் நேற்று முன் தினம் அதிகாலை ஏற்பட்ட தீயினால் எரிந்து நாசமானது.

நேற்று முன்தினம் காலை ஏற்பட்ட புகை காரணமாகச்சம்பவ இடத்திற்குச்சென்று பார்வையிட்ட நகரசபைஅதிகாரிகள்தீபரவியதை அறிந்து தமது தீயணைப்புப் பிரிவின் உதவியுடன் அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இருப்பினும் பல லட்சம் ரூபா பெருமதியான உடற்பயிற்சி உபகரணங்கள்தீயில்எரிந்துள்ளன.

மக்கெய்சர் விளையாட்டரங்கு புனரமைப்பு காரணமாக இந்த உடற்பயிற்சிக்கூடம் நீண்டகாலம் பாவனையின்றிக் காணப்பட்டது.

இத் தீ விபத்து தொடர்பாக திருகோணமலை துறைமுக பொலிஸ் நிலையத்தினர் விசாரணையைமேற்கொண்டுவருகின்றனர்.

# மாந்தையில் ஐந்து ஏக்கரை விடுவித்தனர் படையினர்



மன்னார், ஒக். 19

மன்னார் திருக்கேதீஸ்வரம் மாந்தைப்பகுதியில் இராணுவத்தினர்வசமிருந்த 5 ஏக்கர் காணிகள் விடுக்கப்பட்டுள்ளன.

இந்தக் காணிகள் நேற்று முன்தினம்புதன்கிழமைமன்னார் பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளன என மன்னார் பிரதேசசெயலகக்காணி அலுவலகர் க.வசந்தன் தெரிவித்தார்.

1990ஆம் ஆண்டு முதல் இராணுவத்தினர் வசமிருந்த இந்த 5 ஏக்கர் காணி சுமார் 28 வருடங்களின் பின்னர் நேற்று முன் தினம் 17 உரிமையாளர்களிடம் வழங்கும் வகையில் மன்னார் பிரதேசச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டது.

5 ஏக்கர் காணியில் சுமார் 15 குடும்பங்களுக்கானகாணிகளும், திருக்கேதீஸ்வரஆலயப்பரிபாலகர் சபைக்கானகாணிமற்றும்வைத்தியசாலைக்கான காணிகளும் அடங்குவதாக மன்னார் பிரதேச செயலக காணி அலுவலகர் க.வசந்தன் குறிப்பிட்டார்.

வடக்கில் முப்படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த பொது மக்களின் சுமார் 87 ஏக்கர் காணிகளை விடுவிக்க அமைச்சரவை அனுமதிவழங்கியுள்ளநிலையிலேயே இந்தக் காணிகள் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஐ)

# யாழ்.மாநகரசபைத் தொழிற்சங்கத்தில் கையூட்டு விவாகாரத்தினால் மோதல்!

## எட்டுப் பேர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ்ப்பாணம் மாநகர சபை சுகாதார தொழிற்சங்கத்தின் இரண்டு தரப்புகளுக்கு இடையே இடம்பெற்ற மோதலையடுத்து 8 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின்சுகாதாரஊழியர்கள்தொழிற்சங்கத்தின் முன்னாள் தலைவர் கையூட்டு வாங்கினார் என்ற குற்றச்சாட்டை அந்தச் சங்கத்தின் புதிய தலைவர் முன்வைத்தமையை அடுத்தே இந்த மோதல் ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் சுகாதார ஊழியர்களின் தொழிற் சங்கத்தின் தற்போதைய தலைவர்மற்றும்அவரதுதரப்பைச் சேர்ந்த மூவரும் சங்கத்தின் முன்னாள் தலைவர் மற்றும் அவரது தரப்பில் மூவர் என 8 பேர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முன் தினம் புதன்கிழமை முற்படுத்தப்பட்டனர்.

இரண்டு தரப்புகளும் திருநகர் பகுதியில் மோதலில் ஈடுபட்டனர் என்று பொலிஸாரால் நீதிமன்றில் அறிக்கை முன்வைத்தனர்.

முன்னாள்தலைவர்கையூட்டுப் பெற்றார் எனப் புதிய தலைவர் குற்றச்சாட்டை முன்வைத்தார். அதுதொடர்பில்அவரிடம்விளக்கம் கேட்கச் சென்றபோதே, அவரது தரப்புகள் முன்னாள் தலைவரைத் தாக்கினார்கள் என்று முன்னாள் தலைவரின் சட்டத்தரணி மன்றுரைத்தார்.

முன்னாள் தலைவர் கையூட்டு பெற்றார் என்று தற்போதைய தலைவருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவை தொடர்பில் விசாரித்தபோதே முன்னாள் தலைவரும் அவரது தரப்புகளும் தற்போதைய தலைவரையும் ஏனையோரையும் தாக்கினார்கள் என்று புதிய தலைவரின் தரப்புச் சட்டத்தரணி சமர்ப்பணம் செய்தார்.

இரு தரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த மன்று 8 பேரையும் வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.(ஐ)

# 5 ஆயிரம் ரூபா நாணயத் தாளை இரத்துச் செய்யுமாறு கோரிக்கை

கொழும்பு, ஒக். 19

5 ஆயிரம் ரூபா நாணயத் தாளை இரத்துச் செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் கடந்த செவ்வாய் கிழமைஇடம்பெற்றஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே நீதி சமூகத்துக்கான தேசிய அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சரத் விஜேசூரிய இந்த கோரிக்கையை முன்வைத்தார்.

அங்கு கருத்து வெளியிட்ட அவர், ‘என்.எம். பெரேரா நிதி அமைச்சராக இருந்த காலத்தில் பொருளாதார நெருக்கடியொன்று ஏற்பட்டது. அப்போது புழக்கத்தில் இருந்த 50 ரூபா மற்றும் 100 ரூபா நாணயத் தாள்களை இரத்துச் செய்வதற்கு, என்.எம். பெரேரா தீர்மானித்திருந்தார்.

இதன் மூலம், அப்போது நாட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கறுப்பு பணத்தை வெளியே கொண்டுவர முடிந்தது. இதே போன்று, இன்றும் புழக்கத்தி லுள்ள 5000 ரூபா நாணயத் தாளை இரத்துச் செய்வதன் ஊடாக, கடந்தகாலத்தில் அடைந்த நன்மையை விடவும் தற்காலத்தில் அதிக பயன்களைப் பெற முடியும்.

சட்டத்திற்கு முரணான விதத்தில் பணத்தைப் பல்வேறு முறைகளில் மறைத்துவைத்திருப்பது தொடர்பில் தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன.

சில அரசியல்வாதிகளிடமுள்ள 5000 ரூபா நாணயத் தாள்கள் நிரப்பிய பொதிகள் விகாரைகளிலும், கொள்கலன்களிலும் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன், நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு ஒரு தீர்வாக, இறக்குமதி செய்யும் பொருள்களுக்குக் கட்டுப்பாடு விதிப்பதை விடவும், அரசி லுள்ள அரசியல்வாதிகள் முன்னெடுக்கும் பாரிய செலவிலான விழாக்களையும், நிகழ்வுகளை யும் நிறுத்துவது தான் மிகவும் பொருத்தமான நடவடிக்கையாகும்–என்றார்.(ஐ)

# புதிய தொழில் முயற்சியாளர்களுக்கு யாழ்ப்பாணத்தில் மத்திய நிலையம்

## அனுமதி வழங்கியது அமைச்சரவை

யாழ்ப்பாணம், ஒக். 19

புதிய தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் மத்திய நிலையம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்திய அரசின் நிதி உதவியுடன் யாழ்ப்பாணத்தில் வர்த்தக மத்திய நிலையம் ஒன்றை அமைப்பதற்காக அபிவிருத்தி மூலோபாயம் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிர சமர்ப்பித்த ஆவணத்துக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போதே இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான தொழில் முயற்சியாளர்களை உருவாக்கி புதிய தொழில்வாய்ப்புக்கான சந்தர்ப்பம் மற்றும் வருமான வழியை ஏற்படுத்தி வடக்கு மாகாணத்தில் நிலையான அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக ஏற்றுமதி சந்தையில் ஈடுபடக்கூடிய வகையில் தொழில் சேவை திட்டங்களுக்கும் தொழில் முயற்சியாளர்களுக்கு மிகவும் இலகுவாகவும் பயனுள்ள வகையிலும் தமது அலுவலகங்களை அமைத்துக் கொள்ளக்கூடிய வகையில் தேவையான சேவைகளை வழங்குவதற்காக புதிய தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் மத்திய நிலையம் ஒன்று இலங்கை – இந்திய அரசுகளின் நிதிப் பங்களிப்புடன் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவுள்ளது என்று அமைச்சரவை முடிவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாலக டி சில்வாவை பதவி நீக்க அனுமதி

கொழும்பு, ஒக். 19

பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வாவை பதவியில் இருந்து நீக்குவதற்குப் பொலிஸ் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக டி சில்வாவை பணி நீக்கம் செய்யுமாறு பொலிஸ் ஆணைக் குழுவுக்கு சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் பரிந்துரை செய்திருந்தார்.

இந்நிலையில் நாலக டி சில்வாவைப் பதவியில் இருந்து நீக்குவதற்கு பொலிஸ் ஆணைக்குழு அனுமதியளித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிரான கொலை முயற்சி சதித் திட்டம் தீட்டினார் என அவர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஏழு விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்திய இங்கிலாந்து




இலங்கை – இங்கிலாந்து இடையிலான 3ஆவது ஆட்டத்தில் இங்கிலாந்து 7 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்தி 2-0 என தொடரில் முன்னிலை பெற்றுள்ளது.

இலங்கை – இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டி நடைபெற்று வருகிறது.

தம்புள்ளையில் நடைபெற்ற முதல் ஒரு நாள் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவிற்கு வந்தது. 2ஆவது போட்டியில் மழை பாதித்தாலும் டக் வொர்த் லீவிஸ் முறைப்படி இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது.

இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையே பல்லேகலே மைதானத்தில் மூன்றாவது போட்டி பகல் – இரவு ஆட்டமாக நடைபெற்றது. மழையால் ஆட்டம் 21 ஓவராக குறைக்கப்பட்டது.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி பந்துவீச்சை தெரிவு செய்தது. இலங்கை அணி சார்பில் நிரோஷன் டிக்வெல்லவும், சதீர சமரவிக்ரமவும் தொடக்க ஆட்டக்காரர்களாக இறங்கினர்

முதல் விக்கெட்டுக்கு 57 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் டிக்வெல்ல 36 ஓட்டங்களில் வெளியேறினார். அவரை தொடர்ந்து, சதீரவும் 35 ஓட்டங்களில் வெளியேறினார்.

அடுத்து இறங்கிய வீரர்கள் நீடித்து நிலைக்கவில்லை. இதனால் இலங்கை அணி நிர்ணயம் செய்யப்பட்ட 21 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 150 ஓட்டங்கள் எடுத்தது.

இங்கிலாந்து சார்பில் அடில் ரஷித் 4 விக்கெட்டும், டாம் கர்ரன் 3 விக்கெட்டும் வீழ்த்தினர். இதையடுத்து, 151 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து அணி களமிறங்கியது.

தொடக்க ஆட்டக்காரர் ஜேசன் ராய் அதிரடி காட்டி 26 பந்தில் 41 ஓட்டங்கள் எடுத்து அவுட்டானார். அணித்தலைவர் இயன் மார்கன் சிறப்பாக ஆடி அரை சதமடித்து அணியை வெற்றி பாதைக்கு அழைத்துச் சென்றார்.

அவருக்கு பென் ஸ்டோக்ஸ் ஒத்துழைப்பு கொடுத்தார். இதனால் இங்கிலாந்து அணி 18.3 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 153 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

அத்துடன், தொடரில் 2-0 என முன்னிலை பெற்றுள்ளது. ஆட்ட நாயகன் விருது அடில் ரஷித்துக்கு வழங்கப்பட்டது.

இரு அணிகளுக்கு இடையிலான 4ஆவது ஆட்டம் நாளை பல்லேகல மைதானத்தில் நடக்கிறது.

# விமர்சனங்களுக்கு பதிலடி கொடுத்த இலங்கை வீரர் அஞ்சலோ மத்தியூஸ்



இலங்கை அணியின் நட்சத்தி வீரரான அஞ்சலோ மத்தியூஸ் உடற்தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றுவிட்டார் எனத் தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இலங்கை அணி வீரரான மத்தியூஸ் சமீபத்தில் நடைபெற்று முடிந்த ஆசியக் கிண்ணத் தொடரில் கப்டனாக அணியை வழி நடத்தி வந்தார்.

ஆனால் அவர் தலைமையிலான அணி ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் போன்ற கத்துக்குட்டி அணிகளிடம் அடி வாங்கி, நாடு திரும்பியது.

இதனால் மத்தியூஸ் கடும் விமர்சனத்திற்குள்ளானார். அவரை கப்டன் பதவியிலிருந்து விலகும் படி இலங்கை கிரிக்கெட் சபை கேட்டுக் கொண்டது.

அதன் பின்னர் அவரும் தன்னுடைய கப்டன் பதவியிலிருந்து விலகினார். தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் இங்கிலாந்து அணிக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இருந்து மத்தியூஸை இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் நீக்கியது.

இப்படி ஒரே சமயத்தில் கப்டன் பொறுப்பில் இருந்தும் நீக்கப்பட்டு, அணியில் இருந்து ஒதுக்கப்பட்டிருப்பது இலங்கை ரசிகர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

உடற்தகுதியை நிரூபிக்கவில்லை என்பதனால் மத்தியூஸ் அணியில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறார் எனவும் செய்திகள் வெளியாகின.

ஆனால், அணியில் இருந்து உங்களை நீக்கப் போகிறோம் என்று முன்னரே மத்தியூசிடம் அணி நிர்வாகம் கூறியதாகவும், அதற்கு பதிலளித்த மத்தியூஸ், வேண்டுமானால் எனக்கு பிட்ன்ஸ் டெஸ்ட் வையுங்கள் என்று கோரிக்கை விடுத்து இருந்தார் எனவும் தகவல் வெளியானது.

ஆனால், அதனைக் கருத்தில் கொள்ளாத இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் அவரை அணியில் இருந்து நீக்கியதாகக் கூறப்பட்டது.

இந்நிலையில் இவர் கடந்த 15 ஆம் திகதி தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் யோ –யோ டெஸ்டில் வெற்றி பெற்றுவிட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

மத்தியூசிஸ் விளையாடுவதற்கு போதுமான உடற்தகுதி இல்லை என்று பலரும் விமர்சித்த நிலையில், யோ–யோ டெஸ்ட் வெற்றி மூலம் அவர்களுக்குப் பதிலடி கொடுத்துள்ளார் அவர்.

# ஜெயசூர்யா மீதான குற்றச்சாட்டு உண்மையெனில் என்ன தண்டனை?

இலங்கை அணியின் முன்னாள் வீரரான ஜெயசூர்யா மீதான குற்றச்சாட்டு உண்மை என்றால், அவருக்கு 6 மாதம் முதல் 5 ஆண்டுகள் வரை தடை விதிக்க வாய்ப்புள்ளது என்ற தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கெட் தேர்வுக்குழுத் தலைவராக ஜெயசூர்யா பொறுப்பேற்றார்.

இதை தொடர்ந்து 2014 இல் ரி-20 உலகக்கிண்ணம், ஆசியக் கிண்ணம், இங்கிலாந்து மண்ணில் டெஸ்ட், ஒருநாள், ரி-20 என அனைத்திலும் வெற்றி மேல் வெற்றியாக இலங்கை அணி குவித்தது.

தொடர்ந்து 2015 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு எதிரான தொடரை முழுமையாக இழந்தது, உலகக் கிண்ணத்தில் மோசமான செயல்பாடு என அடி வாங்கியதால் ஜெயசூர்யாவின் பதவிக்காலம் முடிவுக்கு வந்தது.

இதன் பின் அரவிந்த டி சில்வா பொறுப்பேற்றபோதும், 2016 ஏப்ரல் மாதம் ஜெயசூர்யா மீண்டும் தேர்வுக் குழுத் தலைவரானார்.

இதன் பின் இலங்கை அணி தொடர் தோல்வியையே சந்தித்தது. கடந்த ஆண்டில் இந்திய அணிக்கு எதிராக டெஸ்ட், ஒருநாள் தொடரில் இலங்கை அணி அடிவாங்க, இலங்கை கிரிக்கெட்டில் அரசியல் மற்றும் ஊழல் காரணமாகக் கடும் பின்னடைவை ஏற்பட்டதாக புகார் எழுந்தது.

இதனைத் தொடர்ந்து ஜெயசூர்யா தலைமையிலான தேர்வுக் குழுவில் இருந்த அனைவரும் ஒட்டுமொத்தமாக பதவிவிலகினர்.

இந்நிலையில் இலங்கை கிரிக்கெட்டில் நிலவும் முக்கியமான குற்றச்சாட்டுகள், ஊழல் புகார்கள் குறித்து ஐ.சி.சி. ஊழல் தடுப்புபிரிவு விசாரணை நடத்தி, அந்நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், மற்றும் விளையாட்டு அமைச்சரிடம் அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்தது.

ஊழல் தடுப்புப்பிரிவு நடத்திய விசாரணைக்கு ஜெயசூர்யா ஒத்துழைக்க மறுத்தார் எனவும், விசாரணையின் முக்கிய ஆவணங்களை மறைக்க, சேதப்படுத்த மற்றும் திருத்த முயன்றார் எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு 14 நாள்களுக்குள் அவர் பதில் அளிக்கவும் ஐசிசி. உத்தரவிட்டது.



இது குறித்து ஐ.சி.சி. அதிகாரி கூறுகையில், ஜெயசூர்யா மீதான குற்றச்சாட்டுகள் உண்மை என்றால் அவருக்கு குறைந்தது 6 மாதம் முதல் 5 ஆண்டுகள் வரை தடை விதிக்க வாய்ப்புள்ளது எனவும் தவிர அபராதமும் விதிக்கப்படலாம் என்று கூறியுள்ளார்.

# ஆர்ஜென்ரீனாவை வீழ்த்தி பிறேசில் அணி முன்னிலை



சவூதி அரேபியாவின் ஜெட்டா நகரில் நடைபெற்ற நட்பு ரீதியிலான உதைபந்துப் போட்டியில் ஆர்ஜென்ரீனாவை வீழ்த்தி பிறேசில் அணி வெற்றி வாகை சூடியது.

ஆர்ஜென்ரீனா அணியில் நட்சத்திர வீரர் லியோனல் மெஸ்ஸி இடம்பெறாத நிலையில், பிறேசில் அணிக்காக நெய்மர் அதிரடியாக களமிறங்கினார். இந்நிலையில் நிர்ணயிக்கப்பட்ட 90 நிமிட ஆட்டத்திலும் கோல் ஏதும் விழாமல் இரு அணிகளும் சமநிலை வகித்தன.

காயம் காரணமாக வீணான நேரத்தை ஈடு செய்வதற்காக வழங்கப்பட்ட கூடுதல் நேரத்தின் கடைசி 93ஆவது நிமிடத்தில் கோர்னர் கிக் வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டார். நெய்மர் பறக்கவிட்ட பந்தை மிராண்டா மின்னல் வேகத்தில் தலையால் முட்டி வலைக்குள் திணித்தார்.

இதனால் பிறேசில் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றியை வசப்படுத்தியது.

மேலும் இரு அணிகள் 105 முறை மோதியுள்ளதில் பிறேசில் 41-38 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## எரிபொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முறை தொடர்பில் நிதி அமைச்சர் மங்கள சமரவீர விளக்கமளித்துள்ளார்.

டீஸல் ஒரு லீற்றருக்கு 25 ரூபா 48 சதம் வரியும் பெற்றோல் ஒரு லீற்றருக்கு 53 ரூபா 68 சதம் வரியும் அரசால் அறவிடப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நிதி அமைச்சில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இந்த வருடத்தில் மே மாதம் 11ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள எரிபொருள் விலை சூத்திரத்தின் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் 10ஆம் திகதி நள்ளிரவு முதல் எரிபொருள்களின் விலைகள் மாற்றம் செய்யப்படுகின்றன.

எரிபொருள் விற்பனை விலை = வி1 + வி2 + வி3 + வி4

வி1 – சிங்கப்பூரில் ஒரு பரல் கச்சாய் எண்ணெய் வாங்கப்படும் விலையுடன் செலவுகளை இணைத்த பெறுமதி.

வி2 – துறைமுகச் செலவுகள், விநியோகச் செலவுகள், இருப்பிலிருக்கும் போதான செலவுகளை உள்ளடக்கி விநியோகஸ்தர்களுக்கான கொடுப்பனவு.

வி3 – பிரத்தியேக செலவுகள், தேய்மானச் செலவுகள் மற்றும் செலவுக் கூறுகள்.

வி4 – இறக்குமதித் தீர்வை, சுங்கத் தீர்வை, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்திக்கான வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி.

இந்தச் சூத்திரத்தின் அடிப்படையில் மக்கள் ஒவ்வொரு மாதமும் 10ஆம் திகதி எரிபொருள்களின் விலைகளைத் தயாரித்துப் பார்க்க முடியும். அது ஒரு பொழுதுபோக்காகவும் அமையும் என்று நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். (ஐ)

## இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பிரதமர் தலைமையிலான குழுவில் 15 பேர் பங்கேற்றுள்ளனர். அவர்கள், ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தான யு.எல்-195 என்ற விமானத்தில், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து நேற்று பிற்பகல் 2:15 மணிக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

இந்தப் பயணத்தின்போது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை டில்லியில் வைத்துச் சந்திக்கவுள்ளார்.

அத்துடன் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ், அமைச்சர் ராஜநாத் சிங் உள்ளிட்ட அரசியல்வாதிகள் பலரையும் பிரதமர் சந்திக்கவுள்ளார் என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ஐ)

## தங்கத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தொடக்கம் அதிகரித்தது.

நேற்று வியாழக்கிழமை தூய தங்கத்தின் விலை 57 ஆயிரத்து 400 ரூபாவாக அதிகரித்துள்ளது. உலக சந்தையில் கடந்த வாரம் தங்கத்துக்கு ஏற்பட்ட விலை அதிரிப்பே இந்தத் திடீர் ஏற்றத்துக்கு காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

புரட்டாதி மாதத்தில் சுப நிகழ்வுகள் இடம்பெறாததால் தங்கத்தின் விலையில் பெரியளவில் தளம்பல் ஏற்படவில்லை.

எனினும் ஐப்பசி மாதம் நேற்று ஆரம்பமாகி சுப நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதால் அதன் விலையில் அதிகரிப்பு ஏற்படும் என தங்கம் இறக்குமதி செய்வோர் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் நேற்று 24 கரட் பிஸ்கட் தங்கத்தின் ஒரு பவுணின் விலை 57 ஆயிரத்து 400 ரூபாவாக அதிகரித்துள்ளது.

22 கரட் தங்கத்தின் ஒரு பவுணின் நேற்றைய விலை 52 ஆயிரத்து 450 ரூபாவாக உயர்வடைந்துள்ளது. (ஐ)

## புளியங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தார். மேலும் மூவர் படுகாயமடைந்தனர்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு தண்ணீர் ஏற்றி வந்த குளிரூட்டப்பட்ட ஹன்டர் ரக வாகனம் வீதியோரத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்துடன் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புளியங்குளம் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அண்மையில் நெல்லு வெட்டும் இயந்திரத்தை ஏற்றிய நிலையில் உழவு இயந்திரம் தரித்து நின்றது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த தண்ணீர் ஏற்றிய ஹன்டர் ரக வாகனம் அதனுடன் மோதியது.

விபத்தில் ஹன்டர் வாகனத்தில் பயணித்த யாழ்ப்பாணம் வடமராட்சியைச் சேர்ந்த மரியதாஸ் நிறோசன் உயிரிழந்தார். அத்துடன் மற்றொரு இளைஞனான செ.அயந்தன் என்பவரின் கை ஒன்று துண்டிக்கப்பட்டுள்ளது என்று வைத்தியசாலைத் தகவல் தெரிவித்தது.

உழவு இயந்திரத்தில் இருந்த இளைஞன் படுகாயமடைந்ததுடன் மற்றுமொருவர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை புளியங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-100)

## விமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பிடிக்கப்பட்டன.

ஆட்லறிக் குண்டுகள் -04, சிஸ்ரிமோட்டார் வெடி குண்டு-01, பயூஸ்-04, கைக்கண்டு-01, சிறியரகக்குண்டு-01 ஆகியனவே இவ்வாறு கண்டெடுக்கப்பட்டன.

இந்தப் பகுதியில் வெடிபொருள்களை அவதானித்த விமானப் படை வீரர்கள் உடனடியாகப் பொலிஸார் ஊடாக மன்னார் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர்.

இவற்றை அகற்றுவதற்கு மன்னார் நீதிமன்றம் அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து விசேட அதிரடிப்படையினர், பொலிஸார் மற்றும் விமானப்படையினர் இணைந்து வெடி பொருள்களை அகற்றினர். (ஐ)

## மஹிந்தவால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மான சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கூட்டு எதிரணியினரால் மாற்று அரசையோ அல்லது புதிய அரசையோ உருவாக்க முடியாது.

மாற்று அரசுக்கு பதிலாக முடியுமானால் நாடாளுமன்றத்தில் 113 பெரும்பான்மையை பெற்று புதிய அரசைக் கூட்டு எதிரணி அமைத்துக் கொள்ளட்டும்.

மாற்று அரசுக்கான விளக்கம் தெரியாதவர்கள் அதனை நடைமுறைப்படுத்த எத்தனித்தால் அது தோல்வியிலேயே முடிவடையும்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவுகளை சமாளிப்பதற்காகவும், தம்மீதான நீதிமன்ற விசாரணைகளில் இருந்து தப்பித்துக்கொள்வதற்காகவே எதிரணியினர் மாற்று அரசை உருவாக்குவதாக போலி பிரசாரங்களை செய்கின்றனர் – என்றார். (ஐ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) குறைத்து மதிப்பிடுவதற்கும் மூடி மறைப்பதற்கும் சில அரசியல் மற்றும் பல்வேறு தரப்பினர் முயற்சிக்கின்றனர் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசகர்களான ஷிரால் லக்திலக்க மற்றும் சரத் கோங்காகே ஆகியோர் தெரிவித்தனர்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதியின் கொலை சதி விவகாரம் தொடர்பான தகவல் ஊடகங்களைப் பொறுத்தவரை பரபரப்பான நல்லதொரு செய்தியாகும். ஆனால் இந்தச் சம்பவத்தின் தீவிரத் தன்மை தொடர்பில் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டும்.

நாட்டின் தலைவரைக் கொலை செய்யச் சதி இடம்பெறுகின்றமையைக் கேளிக்கையாகப் பார்க்க முடியாது. ஜனாதிபதி கொலைச் சதி தொடர்பில் ஊடகங்களே முதலில் வெளிச்சத்துக் கொண்டு வந்தன. எனினும் தற்போது இவ்விடயம் தொடர்பில் பொய்யான பிரசாரங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கையின் வரலாற்றில் அரச தலைவர்கள் கொலை செய்யப்பட்டமைக்கு அரசியல் சதிகள் உள்ளன. எனவே இந்த விடயத்தை மூடிமறைக்க முயற்சி செய்யக்கூடாது.

உலக நாடுகளிலும் பல அரசியல் தலைவர்கள் அரசியல் சதியால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதேபோன்றே தற்போதை நாட்டின் தலைவரான மைத்திரிபால சிறிசேனவையும் கொலைசெய்ய சதி இடம்பெறுவதாகக் கூறப்படுகின்றது.

ஜனநாயக நாட்டில் ஒருவரின் உரிமை அடுத்தவரின் உரிமையைப் பாதிப்பதாக அமைந்துவிடக்கூடாது. இந்தியாவும் இலங்கையும் ஜனநாயக நாடுகள். இந்தியாவில் கூட மகாத்மா காந்தி, இந்திராகாந்தி, ராஜீவ் காந்தி ஆகியோர் படுகொலை செய்யப்பட்டனர்.

ஒருநாட்டில் அரசதலைவரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட போகின்றது என்றால் அவரைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஊடகங்களுக்கும் உள்ளது.

ஜனாதிபதி கொலைச் சதி தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவு முன்னெடுத்து வருகின்றது. விசாரணைகள் மந்தகதியில் இருந்தாலும் எமக்கு திருப்தியளிப்பனவாகவே உள்ளன.

இதற்கிடையில் பொய்யான பிரசாரங்கள் எமது சமூகத்தினரிடையே பரப்பப்பட்டு வருகின்றன.

இந்தக் கொலை சதி விவகாரம் உண்மையா அல்லது பொய்யா என்று எமக்குத் தெரியாது. ஆனால் இந்த விவகாரம் தொடர்பில் சுயாதீன விசாரணை அவசியமாகும்.

கொலைச் சதி தொடர்பில் தெரியப்படுத்திய நபரின் பின்புலம் தொடர்பில் ஆராயவோ அல்லது அவர் தொடர்பில் விமர்சனங்களையோ முன்வைக்க வேண்டிய அவசியம் இல்லை.

அவர்கள் கூறிய விடயம் என்ன? அந்த விடயத்தின் தீவிரத்தன்மை தொடர்பிலே ஆராய வேண்டும். நீதியின்படி விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு நீதிமன்றமே அதன் உண்மைத்தன்மையைத் தீர்மானிக்க வேண்டும்.

நாமல் குமார மற்றும் நாலக சில்வா ஆகியோர் கலந்துரையாடிய குரல் பதிவுகள் ஒத்துப்போகின்றன என்பது இரசாயனப் பகுப்பாய்வில் ஊஜிதமாகின. எனினும் நாலக சில்வாவுக்கு எதிராக உடனடியாகச் சட்டநடவடிக்கை எடுக்காமல் இருந்தமை சந்தேகத்தைத் தோற்றுவித்தது.

அரசில் உள்ளவர்களும் எதிர்தரப்பில் உள்ள அரசியல்வாதிகளும் மாற்றுக் கருத்துக்களை கூறி இந்த விடயத்தை மூடி மறைக்க முயற்சி செய்கின்றார்களா என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது – என்றனர்.

## மைத்திரியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கூட்டரசிலிருந்து வெளியேறிய சுதந்திரக்கட்சியின் 15 பேர் கொண்ட அணியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் கொழும்பில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட எஸ்.பி.திஸாநாயக்க எம்.பி. –

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை 'றோ' அமைப்பு கொலை செய்ய திட்டம் தீட்டுவதாகத் தகவல் பரப்பப்பட்டது. ஜனாதிபதிக்கும், இந்தியாவுக்குமிடையிலான உறவைச் சீர்குலைக்கும் நோக்கிலேயே திட்டமிட்ட அடிப்படையில் இவ்வாறு தகவல் பரப்பப்பட்டுள்ளது. இதுகூட அரசியல் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் இடம்பெற்றதாகவே இருக்க வேண்டும்.

எனினும், ஜனாதிபதியும், இந்தியப் பிரதமர் மோடியும் பேச்சு நடத்தி இப்பிரச்சினையைச் சுமூகமாகத் தீர்த்துள்ளனர். இரு நாடுகளுக்குமிடையிலான உறவை உறுதிப்படுத்தியுள்ளனர். பிரதமர் ரணில் இந்தியா செல்வதற்கு முன்னர், தொலைபேசியூடாக மோடி, பேச்சு நடத்தியுள்ளமை சிறப்பான விடயமாகும்.

ஜனாதிபதியைக் கொலை செய்வதற்குச் சூழ்ச்சி வகுக்கப்பட்டதாக வெளியான தகவல் தொடர்பில் இன்னும் உரிய விசாரணை இல்லை. இந்நிலையில் அரசியல் ரீதியாகவும் ஜனாதிபதியை இல்லாதொழிக்கும் நடவடிக்கையின் இரண்டாம் கட்டமே, இந்த போலி தகவல் பறிமாற்றமாகும் – என்றார். (ஐ)

## மூன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் இருந்து அனுமதிப் பத்திரமற்ற மூன்று துப்பாக்கிகளும், அதற்கான தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

பாதுகாப்புத் தரப்பினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலொன்றையடுத்து அவரது வீட்டை நேற்று சுற்றிவளைத்த விசேட அதிரடிப்படையினர், தேடுதல் வேட்டை நடத்தியே இவற்றை மீட்டுள்ளனர்.

பிரபுக்கள் பாதுகாப்புக்கு வழங்கப்படும் துப்பாக்கிகளே கைப்பற்றப்பட்டுள்ளன. (ஐ)

## ரி 56...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சின்னக்குளம், நேரியகுளம் பகுதியில் இந்த நபர் கைதானார்.

நேற்று முன் தினம் இரவு 10 மணியளவில் கஞ்சா வியாபாரம் இடம்பெறுவதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நேரியகுளம் பகுதியிலுள்ள வீடு ஒன்றுக்குச் சென்ற செட்டிக்குளம் பொலிஸார் வீட்டைச் சோதனை செய்தபோது கிணற்றின் அருகே இருந்து ரி-56 துப்பாக்கி ரவைகள் 22 மீட்கப்பட்டன. இதனை வைத்திருந்த குற்றச்சாட்டில் மரியம் பிள்ளை ஜேசுதாஸ் (வயது–52) என்பவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த நபர் மீன்பிடிக்கக் குளத்திற்குச் சென்றபோது குளக்கரையில் பொதி செய்யப்பட்ட நிலையில் ரவைகள் காணப்பட்டன எனவும், அதனை எடுத்து வந்து வீட்டுக் கிணற்றுக்கு அருகே வைத்தார் என்றும் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வருவதாகச் செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-100)

## கேள்விக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) எழுப்பிய தொடர் கேள்விகளால் கோபமடைந்து அந்தச் சந்திப்பிலிருந்து இடையில் வெளியேறினார்.

சுதேச பொருள்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூவர் குருணாகல் மேல் நீதிமன்றத்தினால் நேற்று முன் தினம் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், இது தொடர்பான விசேட ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று கொழும்பு விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் நடைபெற்றது.

இதில், கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான, மஹிந்தானந்த அளுத்கமகே, விமல் வீரவன்ஸ, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, நாமல் ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போதே ஊடகவியலாளர்களின் கேள்விகளால் ஆத்திரமடைந்த அங்கிருந்து வெளியேறினார். (ஐ)

## மோடியிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்தியப் பிரதமரின் அலுவலகம் இது குறித்து செய்திக் குறிப்பொன்றை விடுத்துள்ளது.

அதில் –

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியப் பிரதமருடன் தொலைபேசி மூலம் உரையாடினார். இதன்போது தன்னையும் இலங்கையின் முன்னாள் பாதுகாப்புச் செயலாளரையும் கொலை செய்வதற்கான சதி முயற்சிகளின் பின்னால் இந்தியப் புலனாய்வு அமைப்பு உள்ளதாகத் தான் குற்றம்சாட்டினார் என வெளியாகியுள்ள செய்திகளை அவர் நிராகரித்தார்.

தீயநோக்கத்துடனான, தவறான அறிக்கைகள் ஆதாரமற்றவை, பிழையானவை என சிறிசேன தெரிவித்தார். இந்தச் செய்திகள் இரு தலைவர்களுக்கு இடையிலான உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டவை என சிறிசேன குறிப்பிட்டார்.

இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட முயற்சி இதுவெனவும் அவர் தெரிவித்தார்.

இந்தச் செய்திகளை நிராகரிப்பதற்காக தானும் இலங்கை அரசும் உடனடியாக எடுத்துள்ள நடவடிக்கைகளையும் சிறிசேன இந்திய பிரதமருக்குத் தெளிவுபடுத்தினார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை இலங்கையின் உண்மையான நண்பராகவும் தனது சிறந்த நண்பராகவும் கருதுகிறார் என சிறிசேன தெரிவித்தார்.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான பரஸ்பரம் நன்மையளிக்கக்கூடிய உறவுகளைத் தான் மதிக்கிறார் என சிறிசேன வலியுறுத்தியுள்ளார். இந்தியப் பிரதமருடன் தொடர்ந்தும் இணைந்து பணியாற்றுவது குறித்து ஆர்வமுள்ளார் எனவும் சிறிசேன தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் தீயநோக்கம் கொண்ட தகவல்களை நிராகரிப்பதற்கு இலங்கை அரசும் ஜனாதிபதியும் எடுத்துள்ள துரிதநடவடிக்கையை இந்தியப் பிரதமர் பாராட்டியுள்ளார்.

அயல்நாடுகளிற்கு முன்னுரிமை என்ற இந்தியாவின் கொள்கையை மீண்டும் இந்தியப் பிரதமர் வலியுறுத்தியுள்ளார் – என்றுள்ளது. (ஐ)

# வீர மரணம் என்ற தகுதி பிரபாகரனுக்கே உண்டு



## மட்டக்களப்பில் பாரதிராஜா தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஒக். 19

புலியைப் முறத்தால் விரட்டிய தமிழிச்சி என்று படித்திருக்கிறேன். ஆனால் வீர மரணம் என்ற தகுதி, ஈழ மண்ணிலே தன்னுயிரை கொடுத்து விடுதலைக்காகப் போராடிய பிரபாகரனுக்கே உண்டு எனத் தென்னிந்திய திரைப்பட இயக்குநர் பாரதி ராஜா தெரிவித்துள்ளார்.

தமிழ் என்ற ஒரு மொழியும் தமிழன் என்ற ஓர் இனமும் ஒரு வீரம் கொண்ட கறுப்பு முகம்தான் தமிழன் என்பதை உலகத்துக்கு எடுத்துக்காட்டியது ஈழ மண தான் என்றும் அவர் கூறினார்.

அகிலன் மாற்றுத்திறன் குழந்தைகளின் கலை நிகழ்வு மற்றும் கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன் தினம் புதன்கிழமை மாலை மட்டக்களப்பு செங்கலடி சௌபாக்கியா மண்டபத்தில் நடைபெற்றது.

அகிலன் பவுண்டேசன் ஸ்தாபகர் மு. கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தென்னிந்திய திரைப்பட இயக்குனர் பாரதிராஜா, திரைப்பட நடிகர் மற்றும் இயக்குனரான பாக்கியராஜ், நடிகர் விதார்த், நடிகை நட்சத்திரா, திரைப்பட தொகுப்பாளர் சுரேஸ்காமாட்சி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

பாரதிராஜா அங்கு மேலும் தெரிவிக்கையில் –

புலியைப் முறத்தால் விரட்டிய தமிழச்சி என்று படித்திருக்கிறேன் ஆனால் வீர மரணம் என்ற தகுதி, ஈழ மண்ணிலே தன்னுயிரை கொடுத்து விடுதலைக்காகப் போராடிய தலைவர் பிரபாகரனுக்கே உண்டு.

வள்ளுவர் பிறந்தார், பெரிய பெரிய இலக்கியமேதைகள் இலக்கியம் படைத்தனர், தமிழகம் அற்புதமான பூமி. ஆனால் தமிழ் என்ற ஒரு மொழியும் தமிழன் என்ற ஓர் இனமும் ஒரு வீரம் கொண்ட கறுப்பு முகம்தான் தமிழன் என உலகத்துக்கு எடுத்துக்காட்டியது ஈழ மண்ணாகும்.

பெண்கள் கழுத்து முழுக்க நகை அணிந்து இரவு 12 மணிக்கு வீதியிலே சென்றுவிட்டுப் பத்திரமாக வீடு திரும்புகிறாளே அன்றுதான் இந்த நாட்டுக்குப் பெருமையுண்டு – சுதந்திரம் உண்டு. – என மகாத்மா காந்தி அன்று சொன்னார்.

இது, இந்தியாவில் நடக்கவில்லை. ஆனால் அவரது கனவை ஈழ மண்ணில் வன்னிப் பிரதேசத்தில் நேரடியாகப் பார்த்தேன். மனிதன் மறைந்து போனாலும் தமது தடயங்களைப் பதிவுசெய்து விட்டுச் செல்ல வேண்டும்.

இது இந்த பூமிக்கு நாம் செலுத்தவேண்டிய வாடகை. எமது பிறப்பில் எமது கலைகளைக் காப்பாற்ற வேண்டும். இந்த மேடையில் கௌரவிக்கப்படவுள்ள கலைஞர்கள் உங்கள் தடங்களைப் பதிவு செய்துள்ளீர்கள்.

ஈழ மண்ணில் அற்புதமான கலைஞர்கள் உள்ளார்கள், பெரிய இலக்கியவாதிகள் உருவாகியுள்ளனர். இயக்குனர் பாலுமகேந்திரா இந்த மண்ணிலிருந்துதான் வந்திருந்தார்.

இங்குள்ளவர்களுக்கும் சரியான வாய்ப்புகள் கிடைத்திருந்தால் மிகச்சிறந்த கலைஞர்களாக உருவாகுவார்கள். – என்றார். (ஐ)

# ஐ.தே.க.வின். பங்காளியே எவ்.சி.ஐ.டி.!

## ஜோன்ஸ்டன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 19

ஐக்கிய தேசியக் கட்சியின் பங்காளியாகவே நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவு செயற்படுகின்றது. பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனைகளின் நிமித்தமே இந்தப் பிரிவினர் செயற்படுகின்றனர் என முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

பொய்யான குற்றச்சாட்டுக்களைத் தொடுத்து தமது நோக்கத்தை நிறைவேற்ற முயற்சித்த ஐக்கிய தேசியக் கட்சியின் எண்ணம் தற்போது முறியடிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் உத்தியோகப்பூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

என் மீது பொய்யான நிதிமோசடி குற்றம்சாட்டி அரசு அநீதி இழைத்துள்ளது. நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவு ஐக்கிய தேசிய கட்சியின் நோக்கங்களை நிறைவேற்றும் ஓர் அமைப்பு மாத்திரமே. அந்த நிறுவனம் மக்களுக்குச் சேவை வழங்கும் அமைப்பு அல்ல.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் ஆட்சி காலத்தில் மக்களுக்காக உருவாக்கப்பட்ட தாபனங்கள் இன்று பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் தேவைகளுக்கு மாத்திரமே செயற்படுகின்றன. இந்த நிறுவனங்களில் சாதாரண மக்கள் ஒருபோதும் நீதியை எதிர்பார்க்க முடியாது. ஒரு தரப்பினரது அழுத்தங்களின் ஊடாகவே அரசு இன்று செயற்படும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது. – என்றார். (ஐ)

## ஜனாதிபதி கொலைச் சதி விவகாரம்:

# பிரதிப் பொலிஸ்மா அதிபர் 9 மணி நேரம் வாக்குமூலம்



கொழும்பு, ஒக். 19

பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக சில்வாவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் 9 மணிநேரம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன அல்விஸ் ஆகியோரைக் கொலை செய்ய சதி செய்யும் விதமாக தொலைபேசியில் கலந்துரையாடப்பட்டதாகக்கூறப்படும் விவகாரம் தொடர்பில் விசாரணைகளுக்காகப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வா நேற்றுக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முன்னிலையானார்.

கொலைச் சதி விவகாரம் தொடர்பான விசாரணைகளுக்காகக் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ள நாலக சில்வாவைக் கடந்த செவ்வாய்க்கிழமை இரகசியப் பொலிஸார் முன் ஆஜராகுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்த நிலையில் அவர் ஆஜராகவில்லை.

இந் நிலையிலேயே நேற்று அவரை குற்றப் புலனாய்வுப் பிரிவின் மனிதப் படுகொலைகள் தொடர்பான விசாரணை அறையின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ரஞ்ஜித் முனசிங்க முன்னிலையில் ஆஜராகுமாறு உத்தரவிட்டது.

நாலக சில்வாவிடம் நேற்று 9 மணிநேரம் வாக்குமூலம் பெறப்பட்டது. அவரை மீண்டும் இன்று குற்றப் புலனாய்வுப் பிரிவில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ)

# தமிழர் நாகரிக மையம் முல்லைத்தீவில் திறப்பு





வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரனின் சிந்தனையில் உருவான தமிழரின் தொன்றுதொட்ட வாழ்வியலைப் பிரதிபலிக்கும் திறந்தவெளி அருங்காட்சியகத்துக்கான கருத்திட்டமான தமிழர் நாகரிக மையம் நேற்று மாலை 3 மணிக்கு முல்லைத்தீவு மாந்தை கிழக்கு அம்பாள்புரம் பகுதியில் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடமாகாண சபை பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன், மாந்தை கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தயானந்தன், மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர், அமைச்சின் அதிகாரிகள், கலாசார, கல்வி திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ)

# ரணிலின் அமைச்சரவைப் பத்திரம் நிராகரிக்கப்பட்டதென்பது பொய்

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 19

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்குப் பகுதியை இந்தியாவுக்கு வழங்குவது தொடர்பாக பிரதமரால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தை ஜனாதிபதி நிராகரித்தார் என்ற செய்தி உண்மைக்குப் புறம்பானது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஊடகப் பேச்சாளரும் துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சருமான மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்குப் பகுதி தொடர்பில் தம்மால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் தொடர்பாகவே ஆராயப்பட்டது என்றும் அவர் கூறினார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

அமைச்சரவைக் கூட்டத்தின்போது துறைமுகத்தின் கிழக்குப் பகுதியை இந்தியாவுக்கு வழங்குவது தொடர்பாகப் பிரதமரால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தை ஜனாதிபதி நிராகரித்துள்ளார் எனப் பத்திரிகைகளில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

இந்தச் செய்தியில் எந்த உண்மைத்தன்மையும் இல்லை. அமைச்சரவைக்குப் பிரதமர் எந்தப் பத்திரத்தையும் சமர்ப்பித்திருக்கவில்லை.

ஆனால் இவ் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்றவகையில் துறைமுகத்தின் கிழக்குப் பகுதி தொடர்பாக நான் அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பித்திருந்தேன்.

அந்தப் பத்திரம் தொடர்பாகவே அமைச்சரவைக் கூட்டத்தின்போது கலந்துரையாடப்பட்டது – என்றார். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.10.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.